REGD. M. 4842

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் ௫ | 7—3—48 | இதழ் 39

உழைப்பே கடவுள் வழிபாடு

"எல்லா மதமும் ஒன்று என்று மகாத்மா காந்தியைப் போலவே சுவாமி விவேகானந்தரும் பிரசாரம் செய்துவந்தார்.

மகாத்மா காந்தியைக் கொன்றவன் சுத்த முட்டாள் மனிதன். ஏனென்றால், நிழலைச் சாய்த்துவிடுவதன் மூலம் மனிதனைக் கொன்றுவிடலாம் என்று அவன் எண்ணினான்.

மகாத்மா காந்தி என்றும் வாழவேண்டுமென்று நாம் எல்லோரும் சங்கல்பம் செய்துகொண்டோமானால், என்றும் அவர் நம் முன் வசிப்பார். விவேகானந்தரையோ, மகாத்மா காந்தியையோ உயிருடன் வைத்திருக்க உள்ளவழி, அவனவன் பணியை அவனவன் செய்துவருவதேயாகும்.

ஏனெனில், உழைப்பதே கடவுள் வழிபாடு என்பதை இருவரும் போதித்தனர்."

(சி. ஆர்.—மே. வ. கவர்னர்.)

கதிர்காமம்—ஒரு விளக்கம்

[ஈழத்து அடிகள்]

இலங்கைத் தென்கோடியில் உள்ள கதிர்காமத்தில் இருக்கும் சுப்பிரமணியர் கோயில், அளவில், ஒரு சிறிய கட்டிடம். அதாவது இத் தமிழ் நாட்டில் தெருக்கோடிகளில் இருக்கும் பிள்ளையார் கோயில—பஜனை மடங்கள் போன்ற சிறிய அளவினதாகும். அந்தக்கட்டிடம், ஒரு சிறிய அறையையும், ஒரு கூடத்தையும் கொண்டது. அந்தச் சிறிய அறையிலதான் சுப்பிரமணியர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அநத அறை எப்போதுமே திறக்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மையாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை. திருவிழாக் காலங்களில் மட்டும் அந்த அறை திறக்கப்படுவதில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். மற்றக் காலங்களிலும் அது திறக்கப்படாமல்தான் இருக்கிறதென்று எபபடிக் கூறமுடியும்? திருவிழாக் காலமல்லாத மற்ற காலங்களில்தான் அங்கு எவரும் போவதில்லையே! அதனால், அந்த அறை எப்போதுமே பூட்டப்பட்டுக் கிடக்கிறதா அல்லது வெளியாரின் நடமாட்டமில்லாத காலங்களில் திறக்கப்படுகிறதா என்பதை எப்படிக் கூறமுடியும்! ஒரு கட்டிடத்துக்கு அமைக்கப்பட்டிருக்கும் அறை, திறக்கப்படாமலும், திறந்து துப்புரவு செய்யப்படாமலும் இருந்தால், அது பாழுடைந்துதான் கிடக்கும் என்பதுசொல்லாமலே தெரியக்கூடிய ஒன்று. அதிலும் சுண்ணாம்பு, கல் முதலிய பொருள்களைக்கொண்டு கட்டப்பெற்ற ஒரு கட்டிடம், நடமாட்டமற்றுக் கிடக்குமாயின், அத்தகையதொன்று பாழுடையாமல், பளிங்கென ஒளிவிட்டுக்கொண்டு இருக்கும் என்று எவரும் கூறமாட்டார்கள். பளிங்கு மண்டபமுங்கூடப் பார்வையற்றுப் போனால் பாழுடைவது திண்ணம். எனவே, கதிர்காமத்திலுள்ள அந்த அறை எப்போதுமே திறக்கப்படுவதில்லை என்பது ஒருகால் உண்மையாக இருக்குமானால், அந்தத் திறவா அறைக்குள் குடிகொண்டிருப்பதாகச் சொல்லப்படும் சுப்பிரமணியக் கடவுளின் நிலை என்னவாக இருக்கும் என்று கதிரைநாதன் அன்பர்கள் ஒருகணமேனும் எண்ணிப் பார்ப்பார்களாயின், அவரை அந்த மீளாச் சிறையினின்றும் மீட்காமல் இருக்கமாட்டார்கள்.

இனி, இச்சொல்லப்பட்ட அறைக்கு வெளியே — அறைக் கதவை மறைத்து ஒரு திரை தொங்கவிடப்பட்டிருக்கிறது. அந்தத் திரையில் சுப்பிரமணியரின் வடிவம் தீட்டப்பெற்றிருக்கிறது. அந்தத் திரையில் காணப்படும் வடிவத்திற்குத்தான் பூசை ஆராதனை எல்லாம் செய்யப்படுகின்றன. பக்தகோடிகளால் கொடுக்கப்படும் தேங்காய்—பழம் — சூடம் முதலியன அந்தத் திரைக்கு முன்னால் வைக்கப்பட்டுத்தான் நைவேத்யம் செய்யப்படுகின்றன. தேங்காயைப்பூசாரியே உடைக்கின்றான்; சூடமும அந்தப் பூசாரியாலேயே கொளுத்தப்பட்டுத் திரைக்கு ஆராதனை செய்யப்படுகின்றது. இதனை எல்லோரும் பார்க்கலாம். ஆனால், இடம், அளவில் சுருங்கியதாக இருப்பதாலும், பூசை நேரங்களில் மக்கள் ஆயிரக்கணக்காக அங்கு கூடிவிடுவதாலும், பின்னால் நிற்பவர்களுக்கு அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒருவேளை தெரியாமல் இருக்கலாம். இதனால், தேங்காய் உடைபடுவதும், சூடம் கொளுத்தப்படுவதும் ஆளின்றி நடைபெறும் அற்புதம் என்று கூறுவதா? இந்த நிலையில், ஒருவண்டி கோயிலுக்குள் இருந்து தானாகவே வருவதும், அதில் தேங்காய் பழம் வைக்கப்பட்டுவதும், அந்த வண்டி உள்ளே செல்வதும், பின்னர் உடைத்த தேங்காயுடனும் கொளுத்திய சூடத்துடனும வெளியே வருவதுமான செய்திகள், மணலைக் கயிறாகத்திரித்து அதனை ஒரு ஏணியாகப் பின்னி, அதன்மீது காலும் கையும் கண்ணுமற்ற குருடனும் முடவனுமான ஒருவன் ஏறி, வான் வெளியை அடைந்து, அங்குள்ள தடாகத்திலிருக்கும் தாமரை மலரைத் தன்னுடைய கண்களால் பார்த்து, கரங்களால் பறித்துக்கொண்டு வந்தான் என்பதில் எவ்வளவு உண்மையிருக்க முடியுமோ, அவ்வளவு உண்மைதான் கதிர்காமக் கோயில் வண்டியைப் பற்றியும் என்பதை அன்பர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இனி, அக்கோயில் ஓடுகளைப் பன்னிரண்டாண்டுகட்கொருமுறை மாற்றுவது என்று சொல்லப்படுவது ஒருகால் உண்மையாக இருக்கலாம். எப்படியென்றால், வைக்கோல் அல்லது ஓலைகொண்டு வேயப்பட்ட கட்டிடங்களானால், அவற்றை இரண்டு மூன்று ஆண்டுகட்கொருமுறை புதுப்பிக்க வேண்டும். ஆனால், ஓட்டால் வேயப்பட்ட கட்டிடம் அப்படியன்று. அது நீண்ட நாட்களுக்கு நின்று உழைக்கக் கூடியது. எனவே, அதனைப் பன்னிரண்டாண்டுகட்கொருமுறை மாற்றுவதென்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், அந்தஓடுகளை மாற்றுபவன், கீழே இறங்கியவுடன் இறந்துவிடுகின்றான் என்று சொல்லப்படுவதுதான் வியப்பிற்குரிய ஒன்று. ஓடுகளை மாற்றுவதற்காக ஒரு கட்டிடத்தின்மீது ஏறுபவன் இறக்கின்றான் என்றால், அவன், அக்கட்டிடத்திலிருந்து தவறிக் கீழே விழுவதால் ஒருவேளை அத்தகைய இறப்பு நேரிடுமேயன்றி, வேறுவகையில் அவன் இறந்துபடக் காரணம் இல்லை. ஒருவேளை கதிர்காமத்தில் நடைபெறுவதாக இட்டுக்கட்டிச் சொல்லப்படும் இந்நிகழ்ச்சி, அங்குள்ள இரகசியத்தை வெளியார் அறிந்துவிடக் கூடாதென்பதற்காகக் கடவுளின் திருவருளால் நடைபெறுகின்றதென்று சொல்வதற்கும் இல்லையே! அத்தகைய நிகழ்ச்சி ஒன்று கதிர்காமத்தில் நடைபெறுவதை யாரும் பார்த்ததில்லை. என்றாலும் இநதப் புளுகு நாடெங்கும் நல்லமுறையில் பரப்பப்பட்டுவிட்டது. நிகழாதனதையும், நிகழ முடியாததையும் —நிகழ்ந்ததென்றும், நிகழ முடியுமென்றும கூறி மகிழ்வதில் நம் நாட்டவரிடம் பிறநாட்டவர் கிட்டவும் நெருங்க முடியாது. அந்த அளவுக்குப் பண்பட்டுள்ளது நம் நாடு.

இனிக், காட்டில் உள்ள ஒரு யானை, திருவிழாக் காலங்களில் தானாகவே வந்து, கதிர்காமக் கடவுளுக்கு வாகனமாக இருந்து பணியாற்றிவிட்டு, மறுபடியும் காட்டுக்குள் போய்விடுமென்று கூறப்படும் நிகழ்ச்சியும் உண்மையல்ல. கதிர்காமம் என்ற இடம் அமைந்திருப்பதே ஒரு காட்டில்தான். காட்டுக்கும் கதிர்காமத்துக்குமயாதொரு வேறுபாடும் காணமுடியாது, சில கட்டிடங்களைத் தவிர. கதிர்காமக்

கோயிலுக்கு மிக அருகாமையிலேயே காட்டு யானைகளும், புலி, கரடி முதலான பிற விலங்குகளும் நடமாடிக் கொண்டிருப்பதை அடிக்கடி பார்க்கலாம். ஆனால், இங்கு பேசப்படும் கோயில் யானை, காட்டிலிருந்து வருவதும் இல்லை; திருவிழா முடிந்ததும் பழையபடி அது காட்டுக்குப் போவதும் இல்லை. அந்த யானை, கதிர்காமக் கோயிலுக்குச் சொந்தமானது; கோயிலாட்களாலேயே வளர்க்கப்படுவது. திருவிழாக் காலமல்லாத மற்றக் காலங்களில், அந்த யானை, கதிர்காமக் கோயிலின் சொந்தக்காரரான பண்டார நாயக்கர் என்பவர் வீட்டுக்கு அனுப்பப்படுவதுண்டு. இவ்வளவே அந்தக் கோயில் யானையைப் பற்றிய விளக்கம்.

இனிக், கதிர்காமத்தில், திருநீறு தானாக விளைவதென்பதில் ஓரளவு உண்மை உண்டு. அதாவது, கதிர்காமத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு இடத்தில் திருநீறுபோன்ற ஒருவகை வெள்ளைமண் கிடைக்கிறது. இத்தகைய வெண்ணிற மண், கதிர்காமத்தில் மட்டுமல்ல, வேறு பல இடங்களிலும் கிடைக்கிறது. கதிர்காமம் என்ற கோயிலுக்கு அருகாமையில் அந்த வெள்ளை மண் கிடைப்பதால், அதனை மண் என்று கூறாமல், மகிமைவாய்ந்த திருநீறு என்று கூறப்படுகின்றது. கதிர்காமத் திருநீற்றைப் பற்றிய விளக்கம் இதுதான்.

இனி, வள்ளியைச் சுப்ரமணியர் மணம் செய்துகொண்ட இடம் கதிர்காமம்தான் என்று சொல்லப்படுவதும் பலமுறை கேட்டுப் பழக்கப்பட்ட ஒரு பழங்கதை. அதில் உண்மை ஏதுவும் இல்லை. சுப்பிரமணியர் ஆலயங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இந்தக் கதைக்கு ஆதாரமாகச் சில அடையாளங்களை உண்டாக்கிவைத்துக் காட்டுவது அந்தந்தக் கோயிற் பூசாரிகளின் வழக்கமாகும். கதிர்காமத்தில் இக்கதை நன்கு வலியுறுத்தப்படுவதற்குக் காரணம்; அந்தக் கோயில் ஒரு காட்டில் இருப்பதாலும், அதற்குப பூசை செய்பவர்கள் வேடுவர்குல வழித் தோன்றல்கள் என்று சொல்லிக் கொள்வதினாலுமேயாகும். இனி இந்நிகழ்ச்சிக்கு ஆதாரமாக, வள்ளியை அச்சுறுத்த வந்ததாகச் சொல்லப்படும் யானையின் அடிச்சுவடுகள் அங்குள்ள கற்பாறைகளில் பதிந்திருப்பதாகக் கூறி அத்தகைய அடையாளங்கள் காட்டப்படுவதன் உண்மை என்னவென்றால், யானையின் அடிச்சுவடு போன்ற சில குறிகள் அங்குள்ள கற்பாறைகளில் காணப்படுவதுதான். அவை, காட்டு யானைகள் அந்தப் பாறைகளின்மீது நடமாடுவதால் ஏற்படும் குறிகளாகும். எப்படியென்றால், மழை பெய்வதால் ஏற்படும் ஈரத்தால் கற்பாறைகளில் பாசி படிகின்றது; பாசி படிந்த கற்பாறைகளின்மீது யானைகள் நடமாடுகின்றன; அந்த நடமாட்டத்தால், யானைகளின் அடிச்சுவடுகள் பாசி படிந்த கற்பாறைகளில் நன்கு பதிந்து, அடிச்சுவடுகளில் அகப்படும் பாசி, தூரிகை (பிரஷ்) போட்டுத் துப்புரவு செய்யப்படுவதுபோல் சுத்தமாக நீங்கி விடுகின்றது; இதனால் யானைகளின் அடிச்சுவடுகள் பட்ட இடங்கள் வெண்மையாகவும், மற்ற இடங்கள் பாசி படிந்திருப்பதால் கருமையாகவும் காணப்படுகின்றது. இப்படி ஏற்பட்ட அடிச்சுவட்டை ஆதாரமாகக் காட்டித்தான், சுப்பிரமணியர் வள்ளியைத் திருமணம் செய்துகொண்டது கதிர்காமத்தில்தான் என்பதை மெய்ப்பிக்க அங்குள்ள பூசாரிகள் அரும்பாடு படுகின்றனர் என்பதை அன்பர்கள் உணரவேண்டும்.

இனிக், கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாக்காலங்களில் உண்டாகும் வரும்படி, ஆண்டு ஒன்றுக்கு ரூபா ஐம்பதினாயிரத்துக்குக் குறையாதென்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இத்தொகை ஆறு பாகமாகப் பிரிக்கப்பட்டு, ஒருபாகம் அரசியலாருக்கும், ஐந்துபாகங்கள் கோயிலுக்கும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அரசியலார், தாங்கள் எடுத்துக் கொள்ளும் தொகையைத், திருவிழாக்காலங்களில் அங்கு வந்து கூடும் பொதுமக்களின் பாதுகாப்புக்காகக் கொண்டுவரப்படும் போலீஸ படையினருக்கும், அங்குவந்து தங்குபவர்கள் நோய்வாய்ப்பட்டால், அவர்களுக்கு மருத்துவம் செய்யவும் செலவிடுகின்றனர். கோயிலுக்காகக் கொடுக்கப்படும் ஐந்துபங்கையும், கோயிலாட்கள் தங்கள் விருப்பம்போல் பலவிதமான காரியங்களில் செலவிடுகின்றனர்.

இனிக், கதிர்காமத்திலுள்ள தெய்வயானையம்மன் கோயில் வரும்படியில், அரசியலார் எடுத்துக் கொள்வதுபோக எஞ்சியதொகையில், ஒரு பகுதி கொழும்புக்கும், ஒரு பகுதி வடஇந்தியாவிலுள்ள காசிக்கும் போய்விடுகிறது. தெய்வயானை கோயிலின் தலைமை நிலையம் காசியில் இருப்பதால் அங்கு ஒரு பகுதிப் பணமும், அக்கோயிலின் மானேஜராக வேலை பார்ப்பவர் கொழும்பில் இருப்பதால் அவருக்கு ஒரு பகுதிப் பணமும் அனுப்பப்படுகின்றது.

கதிர்காமக் காட்டுக்குள் இருக்கும் இத்தெய்வயானையம்மன் கோயிலுக்கும் வடநாட்டிலுள்ள காசிக்கும் எப்படித்தொடர்பு ஏற்பட்டதென்பது சரியாகத் தெரியவில்லை. என்றபோதிலும், வடநாட்டிலிருந்து வந்த ஒரு சாமியார்தான் முதன்முதலாகக் கதிர்காமம் என்ற இடத்தைக் கண்டறிந்ததாகவும், அக்கண்டுபிடிப்புச் சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்ததாகவும், அன்று முதல் அவர்கள் அங்கு தங்கும் உரிமையுடன் இருந்து வருவதாகவும், அதனால், தெய்வயானையம்மன் கோயிலும் அதன் வரும்படியும் அவர்களையே சார்ந்ததென்றும் கூறப்படுகின்றது. ஆனால், இது, எந்த அளவுக்கு உண்மையென்பது இன்னும் முடிவாகத் தெரியவில்லை.

இனி, ஒரு பெருந்தொகைப் பொருட் செலவு, கதிர்காமத்துக்குப் போகிறவர்களுக்கும் உண்டு. அதாவது, அங்கு போகிறவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் பொருள் நிலைக்கேற்பக், கற்பூரத்தை வாங்கிக் கொண்டுபோய் அங்கு கொளுத்துகின்றனர். குறைந்தது சுமார் ஐயாயிரம் ரூபா மதிப்புள்ள கற்பூரம் ஆண்டுதோறும் அங்குகொளுத்தப்படுகின்றது. அப்படியென்றால், ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபா வீதம், கதிர்காமக்கடவுள் ஜப்பானியர்மீது கருணைகாட்டி அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார் என்று பொருள் அதாவதுஜப்பான் சூடமே கதிர்காமத்தில் எரிக்கப்படுகின்றது என்பது இதன் விளக்கம். கதிர்காமத்துக்குப்போகின்ற அனைவரும் தாங்கள்கொண்டு போகும் கற்பூரத்தை, அங்கு கிடைக்கும் வெண்ணிற மண்ணு (திருநீற்று)ல்நிரப்பப்பெற்ற புது மட்பாண்டம் ஒன்றில் இட்டு எரிப்பார்கள். அதாவது, சுவாமி, யானைமீது வீதிவலம் வரும்போது, ஆண்பெண் அனைவருமே தங்கள் தலைமீது அந்த மண்சட்டியை வைத்

துக்கற்பூரத்தை எரித்துக்கொண்டு செல்வார்கள். மறுநாள் காலையில் பார்த்தால் ஒவ்வொருவருடைய துணியும் உடம்பும் கருநிறமாகமாறி இருக்கும். அவ்வளவு புகை, கற்பூரம் எரிப்பதனால் உண்டாகிக், கதிர்காமம் முழுவதையுமே கருநிறமாக மாற்றிவிடுகிறது. மூக்கைச் சீறினால் மூன்றுநாட்களுக்குக் கருநிறமான சளியேவரும். காதைக்குடைந்தால், கருநிற அழுக்கு, கட்டி கட்டியாக வரும். இது பொய்யுமல்லப், புனைந்துரையுமல்ல. கதிர்காமத்துக்குப் போகின்றவர்கள் அடையும் ஆனந்தங்களில் இதுவும் ஒன்று.

இனிக், கதிர்காமத்திலுள்ள சுப்பிரமணியர் கோயிலில் திருவிழா நடக்கும்போது, கோயிலின் அறைக்கும் அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும் திரைக்கும் இடையே வைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய பெட்டியைப்பட்டுத் துணியால்மூடி எடுத்து வந்து, யானை மீது வைத்துச் சுற்றி வருவார்கள். அந்தப் பெட்டிக்குள் தான் 'கதிர்காம இரகசியம்' அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப்பெட்டிக்குள் கதிர்காம இரகசியத்தை வைத்தவர் யார்? என்று கேட்டாலோ, விளக்கம் உரையார். இந்தப் பெட்டியைப் பற்றி இன்னொரு புதுமையும் சொல்லப்படுவதுண்டு. அதாவது, திரை மறைவில் வைக்கப் பட்டிருக்கும் பெட்டியை, முதலில் பூசாரி ஒருவன் எடுத்து வந்து வெளியே வைக்கின்றான். அதனை வெளியில் நிற்கும் பூசாரிகள் நால்வர் தூக்கிச் சென்று யானை மீது வைக்க, யானை அதனைச் சுமந்து செல்கின்றது. இந்தப் பெட்டியை ஒரு ஆள் தூக்கினால் ஓராட்பாரமும்; நாலு பேர் தூக்கினால், நாலாட்பாரமும்; யானை சுமந்து செல்லும்போது, ஒரு யானைப் பாரமும் இருக்குமாம். இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமானால், ஒருவன் எவ்வளவு அதிகப்படியான பாரத்தைத் தூக்க முடியுமோ அந்த அளவு கனமுள்ளதாகவும், அந்தப் பொருளே நாலு பேர் சேர்ந்து தூக்கும் பொழுது, அந்த நால்வரும் எந்த அளவு எடையுள்ள பொருளைத் தூக்கமுடியுமோ அந்த அளவு எடையுள்ளதாகவும், அதனையே ஒரு யானை சுமக்குமானால், அந்த யானையால் எந்த அளவு சுமையைச் சுமக்க முடியுமோ அந்த அளவுக்கு அப்பெட்டியின் எடை வளர்ந்தும் விடுமாம். இது, இன்றும் கதிர்காமத்தில் பேசப்படும் ஒருபுடம் போட்டு வடிகட்டிய-கலப்படமற்ற-களங்கமற்ற முழுப் பொய்யாகும். இந்தப் பொய்க்கு ஒரு மேற்கோள் கூறவேண்டுமானால், அதற்கு, மதுரையில் இருந்ததாகச்சொல்லப்படும் சங்கப்பலகையைத் தான்கூறவேண்டும். மதுரையில், சங்கம் இருந்த காலத்தில், அங்கே ஒரு பலகை இருந்ததாம். அதில் நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்து சங்கத் தமிழை வளர்த்தனராம். யாராவது ஒரு புலவர் அந்தச் சங்கத்தில் சேர விரும்பினால், அந்தப் பலகையில் வீற்றிருக்கும் புலவர்கள் அந்தப் புலவரை நோக்கி, "நீர் இச் சங்கத்திலிருந்து தமிழை வளர்க்கக் கூடிய தகுதியுடையவரா என்பதை அறிய, இதோ நாங்கள் வீற்றிருக்கும் பலகைதான் தேர்வு (பரிட்சை)க் கருவி; எனவே இந்தப் பலகை, நீர் இருப்பதற்கு இடந்தருமாயின், நாங்கள் உம்மை ஏற்றுக் கொள்வதில் தடையில்லை" என்று கூறுவார்களாம் புலவர் அந்தப் பலகைக்கு கிட்டப் போவாராம். புலவர், அதில் இருக்கத் தகுதியுடையவர் என்பதைப் பலகை அறிந்தால், அது, வளர்ந்து அந்தப்புலவர் இருப்பதற்கு மட்டும் இடங்கொடுக்குமாம். தகுதியற்றவர் என்றால் அது வளராதாம். திருவள்ளுவர், தமது குறளை அரங்கேற்றுவதற்காக அங்கு சென்ற போது, அந்தப் பலகை, திருக்குறள் எழுதப் பெற்ற ஏடு மட்டும் இருக்ககூடிய அளவுக்குச் சுருங்கிவிட்டதாம்; அப்போது அந்தப் பலகையில் வீற்றிருந்த நாற்பத்தொன்பது புலவர்களும், பலகை சுருங்கச் சுருங்க ஒவ்வொருவராக மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் விழுந்து கரை ஏறினராம்.

இந்நிகழ்ச்சி, சங்கப் புலவர்களின் திறமைக்கும், திருக்குறளின் ஒப்புயர்வற்ற தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டதென்றால், அதனை யாரும் வரவேற்காமல் இருக்கமுடியாது. ஆனால், அந்தப் பலகை, உண்மையாகவே வளர்ந்து கொடுப்பதும், சுருங்குவதுமாகத் தான் இருந்தது என்றால், அதனை எவருமே நம்பமாட்டார்கள். ஒரு பலகைக்கு, இயற்கையாகவே வளர்ந்து பெரிதாகும் தன்மையோ அன்றிச், சுருங்கிக் குறையும் தன்மையோ இருக்காது—இருக்கவும் முடியாது. உலகம் போற்றும்—ஒப்புயர்வற்ற—உயிரனைய திருக்குறளுக்கு உயர்வு காட்ட முயன்ற பிற்காலப் புலவர் பெருமக்கள், அந்தப் பலகைக்கும் உயர்வும் உயிரும் கொடுத்துவிட்டனர் போலும்! என்னே அவர்தம் அறிவுத் திறன்!!

எனவேதான், எடையில் கூடியும் குறைவதுமான இயல்பைப் பெற்றுள்ளதாகச் சொல்லப்படும் "கதிர்காம இரகசிய"ப் பெட்டிக்கு மேற்கோளாகப், பெருப்பதும் சிறுப்பதுமான இயல்பைப் பெற்றிருந்ததாகச் சொல்லப்படும் மதுரைச் சங்கப் பலகையை எடுத்துக் காட்டினேன், இரண்டு நிகழ்ச்சிகளும் உண்மையல்ல, என்பதை விளக்க.

இனிக், கதிர்காமத்திலுள்ள கோயில்கள் எல்லாவற்றிற்கும் பூசை செய்கின்றவர்கள், பூசை செய்யும் போது தங்கள் வாயை ஒரு துணியால் மூடிக் கட்டிக்கொள்வது வழக்கம். காரணம்,—அந்த இடத்தில் மந்திரங்கள் எதுவும் உச்சரிக்கக் கூடாதென்பது. இனி, அங்குள்ள கோயில்கள் எல்லாமே திரையிட்டு மூடப்பட்டு, அந்தந்தக் கோயிலிலுள்ள கடவுளரின் வடிவங்கள், அந்தந்தத் திரைகளில் தீட்டப்பெற்றிருக்கும். இஸ்லாமிய சமாதிக் கோயிலிலுள்ள திரை மட்டும் எந்த வடிவமும் எழுதப்படாத வெறுந்திரையாகவே இருக்கும், அவர்களுடைய மதம் உருவ வழிபாட்டை மேற்கொள்ளாத காரணத்தால்.

இனிக், கதிர்காமத்தில், சாதிமத வேறுபாடுகள் எதனையும் எவரும் காட்டிக்கொள்வதில்லை. எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் குலம் என்ற உண்மை அங்கு நிலவக்காணலாம். ஆனால், இந்த உயர்ந்த மனப்பான்மை நீடித்திருப்பதில்லை. கதிர்காமத்தைவிட்டுப் புறப்பட்டதுமே இந்த மனப்பான்மை கைவிடப்பட்டு விடுகின்றது. கதிர்காமத்தில் இருந்த போது ஒற்றுமையாயிருந்து ஒரு பந்தியிலேயே உடனிருந்து உணவருந்திய ஒரு மக்கட் கூட்டம், கதிர்காமத்திற்குப் பத்துக்கல் தொலைவிலிருக்கும் திசைமாறுமை என்ற ஊருக்குப் போனதும், அவன் ஒரு முஸ்லிம், இவன் ஒரு சிங்களவன், அவன் ஒரு தமிழன், பறையன் — பார்ப்பான் — வேளாளன் என்று பிரித்து, ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வுப் போட்டியில் இறங்கி

(16-ம் பக்கம் பார்க்க)

இறந்தபின்

[பராஞ்சிபே]

சாதாரண மக்கள் மரணம் என்பதைத் திரிகரணங்களுக்கும் எட்டாத ஏதோ ஓர் அமானுஷ்யமான அகோர சம்பவமாகவே கருதுகின்றனர். அதிபலசாலிகளும் மரணம் என்றால் பீதிகொண்டு அதனின்றும் மீள்வதற்கான எத்தகைய செயல்களையும் அப்பொழுதே செய்ய முற்படுகின்றனர். உண்மையில் மரணத்தைப்பற்றிய பயமானது ஜனசமூகத்திற்கு ஒருவிதத்தில் நன்மையையே உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். ஏனெனில் வாழ்நாளில் ஏற்படும் பல்வேறு சம்பவங்களில் மரணத்தையும் ஒன்றாகக் கருதும் எந்த சமூகவாழ்வும் மன அமைதியோடிருத்தல் அரிது. மனிதருக்கு ஆயுட்காலம் மிகவும் முக்கியமாதலின், ஒவ்வொருவரும் அதனை இயன்ற அளவு காப்பாற்றல் அத்தியாவசியமேயாம். ஏன், இவ்வுலகில் தோன்றும் பல்வேறு தோற்றங்களின் போக்கானது தத்தம் வாழ்வின் வளர்ச்சிக்குப் போராடுவதிலேயே இருக்கின்றதெனக் கூறலாம். இவ்விதமான தீவிர உணர்ச்சி உயிர் வாழ் பிராணிகளிடம் இல்லாதிருப்பின் அவைகள் வெகுகாலத்திற்கு முன்னரே இவ்வுலகத்திலிருந்து மறைந்து போயிருக்கவேண்டும்.

உயிரின் ஆதியையும், அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது எக்காலத்தும் ஒரே தன்மையில் இருத்தல் கவனிக்கத்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், ஏதோ ஒரு காலத்திலாவது ஒரு சிறு அணுவை (Protoplasm) தங்களாகவே சிருஷ்டிக்கக் கூடும்; ஆனால் அதற்கு மேலாவது புகமுடி- பலவித வேறுவேறு பிராணிகளைத் தோற்றுவிக்க அவர்களால் முடியவே முடியாது; முடியப்போவதும் இல்லை! 'ஜடம்' என்ற அசேதனப் பொருளிலே 'ஆன்மா' என்னும் சத்பொருள் ஒன்று அதற்கு அன்னியமாக இருக்கின்றதா இல்லையா என்பதைப் பற்றி நாம் இங்கு ஆராயப் புகவில்லை; எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவிதப் பரிணாமத்தை எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்திர விற்பன்னர்களும் (Physiologists) அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினாலேதான் ஏற்படுகின்றதெனக் கூறுகின்றனர். இதனால் ஜடபதார்த்தங்களின் (Matter) மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தனது வாணாளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப் பிரமாதமாக எண்ணாமல் அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்கவேண்டியதோடு, தன் அறிவு அவ்வப்போது எதெதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்துதல் வேண்டும். மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்த கூறிகளை ஆத்மவாதிகள் (Spritualists) எத்தனையோ சோதனைகளால் விளக்க முற்பட்டும் அவை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்த போதிலும் நிரூபணித்துக்காட்ட முடியாத விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத் தெளியப்படாத ஏதோ ஓர் யூகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும் மனப்பான்மைக்கும் பயத்திற்கும் தக்கபடியாகச் சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப் பற்றிய விஷயத்தை முடிவுகட்டுதல் அறிவுடைமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப் பற்றிய பீதியைப் பலவித மதங்கள், அவ்வவற்றின் பலவகையான பௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரகலோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்திரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகில் உள்ள ஆசாபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைதலென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ரகுப்த எமதூத வேதனைகளென்ன? இன்னும் இவை போன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்பொழுது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெருக்கிவிட்டு நைந்துருகும்படியான பழக்க வழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்துவருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப்பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம் செய்துவந்தபோதிலும், எல்லா மதத்தினரும் பாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளைச் சரிவரச் செய்தாலொழிய அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது. (Resurrection) என்ற கொள்கையினாலே தான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்படுக்கொண்டிருக்க, எத்தனையோ கோடி பொன், சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டும் கோபுரங்களிலும் வீணாகச் செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப்பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு, அவ்வித மயானங்களால் மக்களின் ஆரோக்கியத்திற்கே கெடுதலும் ஏற்படுகின்றது. பிணங்களின் மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோபுரங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன; அவைகள் மிகத் தேர்ந்த சிற்பவேலைத் திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சதை வீணாக்கியிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கதாகும். சமாதிகள், கோபுரங்கள், முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமை (Slaves)களின் நெற்றிக்கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்கவேண்டும்! ஈமச்சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக்கிரியாதிகள் நடத்துவதாலும், எத்தனை இந்திய குடும்பங்கள் குடிக்கக் கஞ்சியில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத்துயரத்தைவிட, அவர்களின் கருமாதிகளுக்காகக் கடன்பட்டுப் பின் உயிருள்ள அளவும் மீளாத் துன்பத்தில் அழுந்தும் துயரம் பெரி

தாகத்தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச் சடங்குகளை நேரில் காணுதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக்கூறின், அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீமூட்டுவதற்குமுன், அவன் ஆத்மா கஷ்டமின்றிப்பிரிந்து போகவேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படுகின்றன. ஆத்மசாந்திக்காக வாய்க்கரிசிசமைத்துப் படைக்கப்படுகின்றது. தவிர "கோடிவஸ்திரம்" என்பதாக நல்ல வஸ்திரமாவது இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகிறது. மீண்ட ஆத்மாவிற்குப் பாலமுதளிக்கப் பசுக்களைக் கோதானமாகக் கொடுக்கப்படுகின்றது. ஆதியில் "சககமனம்" என்ற பெயரால் இறந்த கணவனோடு அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கே வைத்துக் கொளுத்தப்பட்டுச் சித்ரவதையும் செய்யப்பட்டது! தற்காலத்தில் மனைவியர் தலையைமுழுதும் மொட்டை அடித்துவிடவேண்டும்! அவ்வாறு செயவதற்குக் காரணம், அவனது மனைவியாரின அழகைக் குறைத்துக் கற்புக்கு பங்கம் வராமற் காப்பதொன்று, இரண்டாவதாக அவனது ஆத்மா சிரமமின்றியில் சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர்வணி ஏற்படுத்துவதற்குமாம்!

அந்த ஜீவாத்மா சிலநாட்கள்வரையிலும் பூமியில் தன சஞ்சரித்த முக்கியமான இடங்களுக்கு வந்து செல்லுகிறதாம்; அதன நிமித்தம் பலவித படைப்புகள்போட்டு அதன் சாந்திக்காகப் பூஜைசெய்யவேண்டுமாம்! கருமாதி வருஷாந்திர பூஜாகாலங்களில படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைபிடிச் சாதத்தை காகம் சாப்பிட வேண்டியது அத்தியாவசியம். அவ்வாறு அந்நாளில் காகம் சாதம் எடுக்கத்தவறினல் அந்தஜீவன் தன்னுல் அனுபவிக்கக்கொடுத்து வைக்காத ஏதோ ஒலறை நினைந்து, துக்க சாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்னவென உத்தேசித்து அதனை நிறைவேற்றுவதாக நிருமாணித்தபடி அநேக மணிநேரம் காத்துச்சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின தர்ப்பைப்புல்லேமுடிச்சுப்போட்டுக் காகமாகப் பாவனை செய்து அந்தச் சாதத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமானதைத் தேற்றுவார்கள்! அவ்வித சாஸ்திரப் பிராயச்சித்தம் செய்தபோதிலும் அவர்களது கோழைமனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படியெப்படி வருமோவென அந்தோ! ஏங்கிப் பரிதவிக்கும்.

கருமாதி கைங்கரியங்கள், உயிரிழந்தநாள் முதல் பனிரண்டுநாட்கள் வரை ஒவ்வொன்றாக நடைபெறும். முதல் வருஷாந்திர நாளானது மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றையதினம் சுற்றத்தாரனைவருக்கும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும். மகனானவன் இவ்வித வருஷாந்திர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது நடத்தவேண்டும். அந்தக் குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் இவ்வித திதி நாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாகிலும் வேலை செய்யக்கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப் பிராணிகள் ஏதாவதொன்றில் புனர் ஜனனம் பெடுத்திருக்கக் கூடுமன்றோ!

இவ்வித மௌடீகப் புராணக் (Anthroporphic கொள்கைகள் இந்த பக்ஷிகளிடத்தே மாத்திரம் தான் காணப்படுகின்றன வென்று நினைக்க வேண்டாம். அவைகள் மனித சமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் காலதேச வர்த்தமானங்களுக்குக் கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாளப்படுகின்றன.

மாண்ட மக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நலனுக்காக உபயோகப் பார்க்கவெனில் ஜனசமூகம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவை பிறர்பால எத்தன்மையில் பிரயோசனகரமாகப் பிரதிபலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலை பெறுகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச் சுடரைக் கொளுத்தி அதன வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமாயின் அதனைப்பற்றிய மௌடீக நோக்கங்களெல்லாம் சூரியன் முன் பனிப்படைகளே போல் பறந்தோடும்; அன்றியும் மதப்பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப் பற்றிய பயப்பேய் மாய்ந்து, மாந்தர் மரணத்தைத் திரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பதும் திண்ணம். மாண்டவனுக்குக் கோடித்துணியும் அறுவகை யுண்டியையும் படைத்துப் புதைப்பதைக் காட்டிலும், அவைகளை உயிருடன் வாழும் மக்களுக்குக் கொடுப்பது பலவகையிலும் சிறந்ததாகும். சிற்ப வேலைப்பாடுகளமைந்த கல்தூபிகளை இவ்வுலக இன்ப துன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின்மேல் அமைத்து அழகு பார்ப்பதை விட, ஏழை மக்களுக்கு உதவும்படி பள்ளிக்கூடம் வைத்திய நிலையம் முதலியன அமைப்பது மிகவும் தகுதியான செய்கையாகும்.

இந்நிலை ஓர் அறிவாளி (Rationalist) எப்பான மேலான இலட்சியங்களில்லாதவனென்று எண்ண வேண்டாம். அவனது இலட்சியங்களெல்லாம் நமது கண்முன் உயிருடன் நடமாடும் மக்களின் மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன. ஏதோ மாண்டவர்களின் ஆத்மசொரூபங்கள் [Spirits] என்பனவற்றைக் கவைச்சாப்பதில் இவன் தனது இலக்ஷியங்களைச் செலுத்துவதில்லை. இந்த ஒரே காரணத்தினால் தான் அவ்வித அறிவாளிகளே தமது இலக்ஷியத்தை நிருபணித்துக் காட்டமுடியும் என்பது, அவர்களே மக்களுடைய முன்னேற்றத்தையும் இன்பத்தையும் மேலோங்கச் செய்வரென்பதும் உண்மையாக ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

—0—

பெரியார் வீடும், "குடி அரசு" ஆபீசும் சோதனையிடப்பட்டது.

3—3— 8 இரவு ஈரோட்டில், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டுச், சில புகைப் படங்களை எடுத்துச் சென்றதோடு, "குடியரசு" ஆபீசையும் சோதனை போட்டுச் சில 'பைல்'களையும் எடுத்துச் சென்றனர்.

கருஞ்சட்டைக்குச் சர்க்கார் தடை உத்தரவு

பல இடங்களில் சோதனை

சர்க்கார் உத்தரவு

2—3—48-ல் சென்னை சர்க்கார், இம்மாகாணத்திலுள்ள கருஞ்சட்டை ஸ்தாபனத்தையும் ராஷ்ட்ரிய சேவாதளத்தையும் தடை விதித்து, கிரிமினல் சட்ட திருத்தத்தின் **16**-வது பிரிவின்கீழ் அறிக்கை விட்டுள்ளனர்.

நகரில் சோதனை

சென்னை சுந்தரராசச் செட்டித் தெரு 6 எண்ணுள்ள கட்டடத்தில் இருக்கும் "திராவிடன்" பத்திரிகாலயத்தைப் போலீசார் 2-3-48 மாலை 4-30 மணிக்குச் சோதனையிட்டு சில கடிதங்களையும், "திராவிடன்" பத்திரிகைப் பைலையும் எடுத்துச் சென்றனர்.

பார்க்டவுன், பொ முசெட்டித் தெருவிலுள்ள தோழர் C. D. T. அரசு அவர்கள் வீட்டையும், வண்ணாரப்பேட்டை, பாடசாமி நாடார் தெருவில் இருக்கும் தோழர் K. அண்ணாமலை அவர்கள் வீட்டையும், வடசென்னைத் திராவிடர் கழகத்தையும், மயிலாப்பூர், பிராடீஸ் தெருவிலுள்ள தோழர் M. K. தங்கவேலர் அவர்களுடைய வீட்டையும், பெரியமேட்டு வராகப்ப குமாரதரு தெருவிலுள்ள தோழர் K. ஆரியசங்கரன் அவர்கள் வீட்டையும், சைதாப்பேட்டை, கூத்தடும்பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள திராவிட இளைஞர் கழகத்தையும் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளையும், கழக மினிட்புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

கோவில்பட்டியில் சோதனை

2—3—48ல் காலை 4 மணிக்கு D. S. P. அவர்களும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சில கானஸ்டேபிள்களும் கோவில்பட்டியிலுள்ள திராவிடர் கழகச்செயலாளர்தோழர் S. அருணாசலம் வீட்டையும், தோழர் வள்ளமுத்துபால்ராஜ் அவர்கள்வீட்டையும் சோதனை செய்து, திராவிடர் கழக சம்பந்தமான புத்தகங்களை எடுத்துச்சென்றனர்.

மதுரையில்

3—3—48-ல் மதுரையிலுள்ள திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களின வீடுகளைச் சோதனை செய்ததோடு, தோழர்கள், செந்தியப்பன், எஸ். முத்து, எஸ். பழனிவேலு, கே. எஸ். இராசமான், எா். எஸ். இராமய்யா, ஆ. சங்கரப்பா, தங்கராஜ், ல. வ. கிருஷ்ணன் ஆகியோரைப் போலீஸ் அழைத்துச்சென்று, கருப்புச் சட்டை சம்பந்தமாக விசாரித்தபின்னர், விட்டுவிட்டனர் என்று தெரிகிறது.

திருச்சியில்

2—3—48 இரவு திருச்சியிலுள்ள ஜில்லாத் திராவிடர் கழகக் காரியதரிசி தோழர் எஸ். பிரான்ஸிஸ் வீட்டை ரிசர்வ் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளும், அங்கத்தினர்கள் சேர்க்கும் பாரங்களையும் எடுத்துச் சென்றனர்.

பொன்மலையில்

2—3—48ல் இரவு 12 மணிக்கு பொன்மலை திராவிடர் வாலிப கழக அங்கத்தினர் தோழர் கைலாசம் வீட்டில் போலீசார் சோதனையிட்டனர்.

சேலத்தில்

3—3—48-ல் சேலம் D. S. P. அவர்கள், சேலம் செவ்வாய்ப்பேட்டையிலுள்ள சுயமரியாதைச் சங்கத்திற்கு வந்து, கருப்புச் சட்டை சம்பந்தமான ரிக்கார்ட்டுகள் ஏதாவது இருக்கிறதா என்று சோதனையிட்டதில், அது சம்பந்தமாக ஒன்றுமே இல்லையென்று ரிப்போர்ட் எழுதிக் கொண்டு போய் விட்டார்.

அரிசிப் பாளையத்தில்

3-3-48ல் சேலம் அரிசிப்பாளையத்திலுள்ள திராவிடர் கழகத்தைச் சோதனையிட்ட போலீசார், அங்கு எந்த விதமான ரிக்கார்டுகளும் கிடைக்கவில்லையென்று ரிப்போர்ட் எழுதிக்கொண்டு போய்விட்டனர்.

விருதுநகரில்

3-3-48ல் விருதுநகரிலுள்ள தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். ராமசாமி, வ. ஏ. எம். வெள்ளையப்பன், பி. இரத்னசாமி ஆகியோர்களின் வீடுகளைச்சோதனையிட்டதில், தோழர்கள் ஆசைத்தம்பி, இராமசாமி ஆகியோர் வீடுகளிலிருந்து மட்டும் சில கடிதங்களைக் கைப்பற்றிச் சென்றனர்.

கடலூரில்

3—3—48-ல் கடலூர் ஓடியிலுள்ள பகுத்தறிவுக் கழகத்தைச் சோதனையிட்ட போலீசார், கழகத் தலைவர் தோழர் எம். கே. வேலு அவர்கள் பெயரையும், செயலாளர் தோழர் பி. ஏ. இளங்கோ அவர்கள் பெயரையும் குறித்துக்கொண்டு சென்றனர்.

வேலூரில்

4—3—48-ல் வேலூரிலுள்ள தோழர் வி. திருநாவுக்கரசு அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டு, சில கருப்புச்சட்டைகளை எடுத்துச்சென்றதோடு, தோழர் சி. பி. சின்னராசு அவர்கள் வீட்டையும் சோதனையிட்டு, கருப்புச் சட்டையையும், "தீப்பொறி" பத்திரிகையையும் எடுத்துச்சென்றனர்.

செங்கற்பட்டில்

4—3—48-ல் செங்கற்பட்டிலுள்ள தோழர் எம். சின்னையா அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டு, அங்கு எதுவும் கிடைக்காமல் போகவே, பிறகு தமிழர் உணவுவிடுதியிலுள்ள ஒரு அறையைச் சோதனையிட்டதில் ஒரு கருப்புச்சட்டையையும் சில புத்தகங்களையும் எடுத்துச்சென்றனர்.

சோழவந்தானில்

4—3—48-ல் சோழவந்தானிலுள்ள தோழர் T. ஆவுடையப்பன் அவர்கள் வீட்டில் போலீசார் சோதனையிட்டதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆலந்தூரில்

4—3—48-ல் ஆலந்தூரிலுள்ள திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எா். கன்னியப்பன் அவர்கள்வீட்டைச் சோதனையிட்டதில்

(12-ம பக்கம பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 7—3—48 [ஞாயிறு

தடை உத்தரவு

திராவிடப் பெருங்குடி மக்கள், பலகாலமாகச் சமுதாயத் துறையில் மிகவும் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்தும் முறையில், திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாரும் கருப்புச் சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்று, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதன் பேரில் இப்போது சிலகாலமாகத் திராவிடர் கழகத்தைச் சார்ந்த பலர், தங்கள் குறைபாட்டைத் தெரிவிக்கும் முறையில் கருப்புச் சட்டை அணியும் வழக்கத்தை மேற்கொண்டு வந்தனர்.

இதனை, இப்போது சர்க்கார் சட்டவிரோதமான ஸ்தாபனம் என்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கருப்புச் சட்டைக்கென ஒரு தனி ஸ்தாபனமே கிடையாது. திராவிடர் கழகத் திட்டங்களிலும் கருப்புச் சட்டை அணிவதை ஒரு ஸ்தாபனமாகக் கொள்ள வேண்டுமென்ற விதியும் கிடையாது. திராவிடர்கள், தங்களுக்குள்ள குறைகளைத் தெரிவிக்கும் முறையில், கருப்புச்சட்டை அணிவதை ஒரு அடையாளமாகக் கொள்ள வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும்.

கருப்புச்சட்டை அணிபவர்களுக்கென ஒரு தனிப்பயிற்சி முகாமோ, படை அணிவகுப்போ, ஆயுதம்தாங்கும் முறையோ, பலாத்கார முறைகளைக் கையாளவேண்டுமென்றதிட்டமோ எதுவும் கிடையாது.

திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் கருப்புச்சட்டை போட்டுக்கொள்ள வேண்டுமென்று, பெரியார் அவர்கள் எப்போது சொன்னாரோ, அன்றே சர்க்காருக்கும் இது சம்பந்தமாக எல்லாம் தெரிந்தே இருக்கும். ஆனால், இவ்வளவு காலமும் சர்க்கார் அதுசம்பந்தமான நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல், இப்போது திடீரென்று, கருப்புச்சட்டைப் படை என்பதாக ஒரு 'ஸ்தாபனம்' இருப்பதாகவும், அது, சட்டவிரோதமானதென்றும் கருதும்படியான நிலைமை ஏற்படக் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

ஒரு சமுதாயம், தனக்குள்ள குறைகளைக்கூடத் தெரிவிக்கக் கூடாதென்ற முறையில் ஒரு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாயின், அதனை ஜனநாயக அடிப்படையைக் கொண்ட சர்க்கார் என்று எப்படிக் கூற முடியும்? ஒரு சமுதாயம், தன்னுடைய குறைகளை எடுத்துக்காட்டி, அவைகளை நிவர்த்தி செய்து கொள்வதுகூடத் தவறு என்பதைத்தானே சர்க்காரின் இந்தத் தடை உத்தரவு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இல்லையேல், எந்தவிதமான பலாத்காரச் செயலையும் அடிப்படையாகக் கொள்ளாத கருப்புச் சட்டையினர் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?

கருப்புச் சட்டை அணிவது என்பது ஒரு ஒழுங்கு முறை; அதாவது தாங்கள் திராவிடர்கள், தங்களு

கருஞ்சட்டையும் தடை உத்தரவும்

—*—

பெரியார் ஈ. வெ. ரா. அறிக்கை

கருஞ்சட்டைபற்றி சர்க்காரின் தடையுத்தரவு சம்பந்தமாகப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அடியிற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

"நம் இயக்கத்தில், திராவிட கழகத்தில் உள்ளோருக்கு கருஞ்சட்டை அணியவேண்டுமென்று வேண்டுகோள் விட்டதானது, திராவிட சமுதாயத்துக்கு இருந்துவரும் சமுதாய இழிவு நீக்கிக்கொள்ளும் உணர்ச்சியை ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆகும். இதைக் கழக அங்கத்தினர் பலரும் மற்றும் சில திராவிடர்களும் ஆணும் பெண்ணும் ஆதரித்து அணிந்து வருகிறார்கள்.

இந்தப்படியாக, கருஞ்சட்டை அணிபவர்களுக்கு எந்த வித நிபந்தனையோ எந்தவித ரிஜிஸ்டரோ சேனைபோன்ற உடையோ யூனிபாரமோ அணிவகுப்போ ஆயுதமோ மற்றும் இவைபோன்ற ஓர் சேனைக்கோ படைக்கோ உள்ள பயிற்சிகளோ மேற்கொண்டது கிடையாது,

இருப்பினும் சென்னை அரசாங்கம் இதை ஒரு அமைப்பாகக் கருதிச்சட்ட விரோதமாக்கியிருக்கின்றது என்ற போதிலும், நான் திராவிடப் பொதுமக்களுக்கு அடிக்கடி தெரிவித்து வருவதுபோல் இது விஷயத்தில் நம் கழக அங்கத்தினரும் திராவிடப் பொதுமக்களும் பொறுமையைக் கையாண்டு சாந்தமும் சமாதானமுமாய் நடந்துவர வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். இதற்கு மாறாக எங்காவது பயிற்சி அணிவகுப்பு இருக்குமானால் அதைக் கண்டிப்பாக நிறுத்திவிடவேண்டும் என்பதைத் தவிர, இந்த உத்தரவினால் நமக்குள் எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிட்டதாகக் கருதவேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்."

சென்னை,
4—3—'48.

ஈ. வெ. ராமசாமி.

டைய குறைகள் போக்கப்படவேண்டும், அவை போக்கப்படும் வரையில் துக்கஅறிகுறியாகக் கருப்புச்சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்பதைத் தவிர, கருப்புச்சட்டை அணிவதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை. என்றாலும், இதனைச் சர்க்கார் ஒரு சட்டவிரோதமான 'ஸ்தாபனம்' என்று கருதக்கூடிய அளவுக்கு, கருப்புச்சட்டை அணிவதைப் பற்றிச் சர்க்கார் தெரிந்திருக்கிறதென்றால், யாரோ சொன்னதைக் கேட்டுக்கொண்டு, இந்தக் காரியத்தைச் சர்க்கார் செய்திருக்கிறதென்று பொருள்படுமேயன்றி, உண்மையாகவே சர்க்கார் கருப்புச்சட்டையைத் திராவிடர்கள் ஏன் அணியமுற்பட்டனர் என்பதனை அறியவோ, அல்லது அதன் அமைப்புமுறை எப்படி, என்னென்ன காரணங்களுக்காக அந்தமுறை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து அதன்படி இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளதென்று கூறவோ முடியாது.

பெரியார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், கருப்புச்சட்டை அணிவதன் காரணத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார். இந்த அறிக்கையில் கூறப்பட்ட காரணத்தையே, கருப்புச்சட்டையைத் திராவிடர்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்று சொன்ன காலத்திலும் பெரியார் அவர்கள் கூறியுள்ளார்.

ஒரு பெரும் பொறுப்பைத் தன் மீது போட்டுக்கொண்டு, அதிகார பீடத்தில் அமர்ந்துள்ள ஒரு சர்க்கார், விஷய விளக்கம் இல்லாத முறையில் எதேச்சாதிகார மனப்பான்மையோடு காரியங்களைச் செய்வது, பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இழப்பதற்கு அடிகோலுவதாகவே முடியும்.

எனவே, சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டு, திராவிடர்கள் தங்கள் பொறுப்பை மறந்து, அமைதிக் குறைவுக்கும், கிளர்ச்சிக்கும் இடமளிக்காமல், தங்களுடைய பெருந்தன்மையைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நல்ல யோசனை

"மதத்தின் பேரால் மாகாணத்தில் கல்லூரிகளே இருக்கக் கூடாது" என்று, தோழர் நாராயண மேனன் அவர்கள் 3—3—48ல் சென்னை மேல்சபையில், பட்ஜெட் விவாதத்தின்போது குறிப்பிட்டார். இது ஒரு நல்ல யோசனை என்பது மட்டுமல்ல, மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவராலுமே வரவேற்கக்கூடியதுமாகும்.

கல்வி நிலையங்கள் மக்கள் அனைவர்க்கும் பொதுவானவை. இளைஞர்களுக்கு அறிவையூட்டி, அவர்களை முன்னேற்றமடையச் செய்வதும், ஒற்றுமை மனப்பான்மையை உண்டாக்கி, அனைவரையும் சகோதரர்கள்போல வாழச்செய்வதுமே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் முரண்பாடு உண்டாக்கக்கூடிய எதுவும், மக்கள் அனைவர்க்கும் பொதுவாக உள்ள கல்வி நிலையங்களில் இடம்பெற விடக்கூடாது.

மக்கள் அனைவர்க்கும் அறிவு எப்படிப் பொதுவானதோ, அது போலவேதான், அந்தப் பொது அறிவைப் போதிக்கும் கல்லூரிகளும் அனைவர்க்கும் பொதுவாக அமைதல் வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அறிவை மட்டும் அனைவர்க்கும் பொது என்று கூறிவிட்டு, அத்தகைய அறிவைப் போதிக்கும் இடங்களில், பொதுநலமனப்பான்மை உண்டாகாதபடி தடுக்கும் முறைகளைக் கையாள்வது, உண்மையான பொதுநல நோக்கம் கொண்டு செய்யப்படும் காரியமாகாது.

ஜாதி வேறுபாட்டின் காரணமாகவோ, மதவேறுபாட்டின் காரணமாகவோ இளைஞர்களிடையே பிளவு மனப்பான்மை வளர்ந்துவிடுமானால், அதனைப் போக்குவதென்பது [illegible]தில் முடியக்கூடியதன்று. அவன் வேறு ஜாதி, இவன் வேறு ஜாதி, அவன் வேறு மதம், இவன் வேறு மதம் என்ற பிளவு மனப்பான்மையை வளர்க்கும் வித்து, மாணவர்களின் இளம் உள்ளங்களிலே ஊன்ற இடமளிப்பதால்தான், ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு மனப்பான்மையும், பகைமையுணர்ச்சியும் உண்டாகின்றன. இந்த எண்ணம் இளம்மாணவர்கள் உள்ளங்களில் பதியவிடாதபடி செய்வதற்கு ஏற்ற இடம் கல்லூரிகளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறலாம். கல்லூரிகளில்தான், பலவிதமாகவுள்ள சாதி மதங்களைச் சார்ந்த மாணவர்களும் ஒன்றுகூடுகின்றனர். அங்கு அவர்கள் கூடுவதன் நோக்கம், தங்கள் தங்கள் சாதி மதங்களுக்கு உயர்வு தேட அல்ல என்பதும், அறிவு வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவர்கள் அங்கு

காஞ்சிபுரத்தில் சோதனை

—*—

3—3—48-ல் பெரியகாஞ்சிபுரம் திராவிடர் கழகத்தலைவர் தோழர் வி. கண்ணப்பர் அவர்களையும், தோழர் C. V. M. அண்ணாமலை அவர்களையும், உள்ளூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப்இன்ஸ்பெக்டரும் சில கான்ஸ்டேபிள்களுடன் சந்தித்து, நகரிலுள்ள திராவிடர் கழகங்களைச் சோதனையிட்டு, கருப்புச்சட்டை சம்பந்தமான ரிகார்டுகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் ஆட்சேபனையில்லை என்று கூறவே, புத்தேரித்தெருவிலுள்ள திராவிடர் கழகத்தையும், பிள்ளையார்பாளையத்திலுள்ள திராவிடர் கழகத்தையும், சின்ன காஞ்சிபுரம் திராவிடர் மறுமலர்ச்சிக் கழகத்தையும் சோதனையிட்டுக், கருப்புச் சட்டைகளையும், கழக ரசீதுப்புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

திராவிடர் ஆராய்ச்சிக் கழகத்தில் சோதனை

சின்னக் காஞ்சிபுரத்திலுள்ள திராவிடர் ஆராய்ச்சிக் கழகமும் சோதனையிடப்பட்டு, கழக மினிட் புத்தகத்தைத் தோழர் T. P. S. பொன்னப்பா அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றனர்.

செல்கின்றனர் என்பதும் வெளிப்படை.

எனவே, கல்லூரிகளில், மாணவர்கள் பெறும் அறிவு, அவர்களை மதச் சச்சரவுகளிலும், ஜாதிப்பிணக்குகளிலும் கொண்டுபோய் விடாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்புக் கல்லூரிகளையே சார்ந்ததாகும். சாதி மதப்பூசல்களால் நம் நாடு எந்த அளவுக்குச் சீர்குலைந்து கிடக்கிறதென்பதை உணரும் எவரும், இனியும் அவை காரணமாக மக்களிடையே பிளவை உண்டாக்கும் முறைகளை மேற்கொள்ளக்கூடாது என்ற முடிவுக்கு வந்து, அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

இந்தத் திட்டங்களை நடைமுறையில் கொண்டுவருவதற்கு உரிய காலம் இதுவே. நம்முடைய நாட்டை நாமே ஆளும் வாய்ப்பைப் பெற்றுள்ள இந்நாளிலும் நாம் இதனைச் செய்யவில்லையென்றால், இந்த விதமான காரியங்களை நம்மால் செய்ய முடியாதென்றோ, முடிந்தாலும் அந்தத் துறையில் நாம் நாட்டம் செலுத்தவில்லையென்றோதான் பொருள்படும்.

நம்மை ஆங்கிலேயரின் பிடியிலிருந்து மீட்டுத்தரும் பெரும் காரியத்தை வெற்றிகரமாக முடித்துத் தந்த காந்தி அடிகள், தம்முடைய அடுத்த வெற்றியாக, ஜாதி மதவேறுபாட்டை யொழிப்பதையே குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றினர். அதிலும் அவர் முழுவெற்றி பெறுவதற்குள், ஜாதிமதம் என்ற கொடுமையின் விளைவே, அவருடைய உயிருக்கு முடிவைத் தேடிவிட்டது. உலகம் போற்றும் ஒரு உத்தமரின் உயிரையே குடிக்கும் அளவுக்கு இந்நாட்டில் உள்ள ஜாதி மதவெறி வளர்ந்து விட்டதைப் பார்த்த பின்னரும், வாளா இருப்போமானால், காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி, அவர்விட்டுப்போன பணியைத் தொடர்ந்து செய்கிறோம் என்பதற்குப் பொருளே இல்லாமல் போய்விடும். அவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்பதற்காக வருந்தி, அனுதாபம் தெரிவிப்பதோடு நின்றுவிடாமல், அவர்செய்து வந்த பணியைத் தொடர்ந்துசெய்து அதில் வெற்றி காண்பதையே நாம் நம்முடைய குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

காந்தியடிகளின் திட்டங்களில் முதல் இடம்பெற்று நின்றது, எல்லா மதமும் ஒன்றே என்பதாகும். இந்த எண்ணம் நம் அனைவருக்கும் ஏற்பட்டுவிட்டால், பிறகு மதப்பூசல்களுக்கே இடமில்லாது போய்விடும். எல்லா மதமும் ஒன்றே என்று எண்ணும் பண்பு முதலில் நம் அனைவருக்கும் ஏற்பட்டுவிட்டால், ஒரு மதத்தோடு இன்னொரு மதத்தை ஒட்டவைத்து, ஒன்றுக்கொன்று உயர்வுதாழ்வுகாணும்மனப்பான்மை நம்மை விட்டகன்றுவிடும். இந்த மனப்பான்மை நம்மைவிட்டு விலகிவிட்டால், நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற ஒற்றுமை உண்டாகும். அந்த ஒற்றுமை, நம் அனைவருக்கும் பொதுவான ஒரு கொள்கையை உண்டாக்குவதற்கு வழி[illegible] கரு. அ[illegible] மதங்களின் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள, ஒன்றுக்கொன்று முரண்பாடான பல திறப்பட்ட கொள்கைகள் எல்லாம் சிதறடிக்கப் பட்டுவிடும்.

பல்வேறு மதங்களையும், ஜாதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு நாட்டில், அவை காரணமாகப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுபடுத்தி ஒருமுகப்படுத்துவதென்பது எளிதில் முடியக்கூடிய காரியமோ என்ற திகைப்புப் பலருக்கு உண்டாகலாம். ஆனால், ஆயுதபலம் எதுவுமின்றி இருந்த நாம், சகலவிதமான ஆயுதபலத்தோடும் படைபலத்தோடும் இருந்து, நம்மை ஆட்டிப் படைத்த ஆங்கிலேயரையே இந்நாட்டை விட்டு ஓட்டும் ஒப்பற்ற காரியத்தைச் செய்து முடித்தோமே என்பதை எண்ணிப் பார்த்தால், அந்த எண்ணம், நமக்கு ஒரு புதுத் தைரியத்தையும், மன எழுச்சியையும் உண்டாக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

ஒரு காலம் இருந்தது எந்தவிதமான காரணத்தைக் கொண்டும் ஜாதி மத விஷயங்களில் எவரும் தலையிடக் கூடாதென்று. இன்றுநிலைமை எப்படி மாறிவிட்டது? ஜாதி என்பதே நாட்டில் இருக்கக் கூடாது; மதபோதனைகள் பள்ளிக்கூடங்களில் இடம் பெறக்கூடாது; மதத்தின் பேராலேயே கல்லூரிகள் இருக்ககூடாது என்ற அளவுக்கு நிலைமை மாறிவிட்டதென்பது மட்டுமல்ல; இவற்றைச் சட்ட பூர்வமாக்க வேண்டுமென்ற அளவுக்கும் நிலைமையில் மாறுதலும் முற்போக்கும் ஏற்பட்டு விட்டது.

இதை எண்ணும்போது, எப்படிப்பட்ட முடியாத காரியத்தையும் முடித்துவிடலாம் என்ற தைரியம் உண்டாகின்றது.

இத்தகைய சிறந்த காரியங்களைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற அடிப்படை அறிவை உண்டாக்குவதற்குரிய இடங்கள் கல்லூரிகளேயாதலால், அவைஎந்தவிதமானமதத்தின் பேராலும் இருத்தல் கூடாதென்றும், அப்படி ஒரு மதத்தின்பேரால் ஒரு கல்லூரி இருக்குமாயின், அந்தக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு, அந்த மதத்தில் பற்றுதலோ அன்றிப் பகைமையோ உண்டாகி, அதன் காரணமாக மாணவர்களிடையே பிளவு பிணக்கு ஏற்பட்டு, இன்றியமையாது தேவைப்படும் ஒற்றுமையென்னும் சிறந்த பண்பு இல்லாமல் போகுமென்றும் கூறுகின்றோம். எனவேதான், நாட்டின் எதிர்கால நலனில் கருத்துள்ள எவரும், தோழர் நாராயண மேனன் அவர்கள் கூறிய இந்த யோசனையை நல்ல யோசனையென்று வரவேற்று, அதனை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறோம்.

மறைவு

தோழர் W. P. A. சவுந்தரபாண்டியன் அவர்களுடைய தாயார், 28—2—48ல் தம்முடைய எழுபத்து நான்காவது வயதில் இயற்கை எய்தினர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"திருவிடம்"

மாதம் இருமுறை வெளியீடு

16—3—48 முதல் பிரதி 1, 16 தேதிகளில் வெளியாகும்.

ஆண்டு சந்தா ரூ 2/-

தொகுப்பாளன்:—

C. B. **தண்டாயுதபாணி,**

அவில்தார்,

20-B மதங்கீஸ்வரன் கோயில் தெரு,

காஞ்சிபுரம்.

செல்வம் நினைவு நாள்

1—3—48-ல் தஞ்சைத் தமிழர் கழகச்சார்பில் செல்வம் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. தோழர் A. Y. அருளானந்தசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார். அவருடைய சொற்பொழிவுச் சுருக்கம் கீழேதரப்படுகிறது.

"செல்வம் அவர்கள் உங்களுக்குத் தெரியாதவர் அல்ல. இந்த நகர ஆட்சியைச் சில ஆண்டுகள் நடத்தி வந்தார்கள். இது அவர்கள் பொது வாழ்வைத் தொடங்கிய காலம். இந்த ஜில்லாவின் கல்விக் கழகத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவும் தொண்டு செய்தார்கள். தஞ்சை ஜில்லா போர்டின் துணைத் தலைவராகவும், பின்னர் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேலாகத் தலைவராகவும் இருந்து பணி ஆற்றினார்கள். அவர்களது ஆளுந்திறமை வியக்கத்தக்கது. ஆட்சியாளர் மெச்சியது. பொதுமக்கள் பாராட்டியது. அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராய வந்த 'சைமன் கமிஷன்' ஜில்லா போர்டு கூட்டங்கள் சிலவற்றைப் பார்வையிட்டார்கள். அவற்றுள் தஞ்சை ஜில்லா போர்டின் கூட்டம் ஒன்று. அக்கூட்டத்தை நம் செல்வம் அவர்கள் நடத்திவைத்த நேர்மையைக் கண்டு வியந்தனர் சைமன் முதலியோர். அவர்களுடைய ஆட்சியிலே நீதி நிலவியது. தஞ்சை ஜில்லா போர்டு ஆளுகையிலுள்ள தஞ்சை அரசரது அற நிலையங்கள் உண்மையான அற நிலையங்களாக ஆயின. இந்த அற நிலையங்களில் நடத்தப்பட்டுவரும் பள்ளிக்கூடங்கள் எல்லா வகுப்பாரும் படிக்க இடங் கொடுத்தது, நம் செல்வம் அவர்களது ஆட்சியில்தான். திருவையாறு 'கல்யாண மஹால்' அறச்சாலை தமிழை வளர்க்கத் தலைப்பட்டது, நம் செல்வம் அவர்களது ஆட்சியில்தான். 'சிரேயஸ் சத்திரம்' ஆகி திராவிட மாணவர்களுக்கு உணவும், உறையுளும் தந்துதவத் தலைப்பட்டது, நம் செல்வம் அவர்கள் ஆளுகையில்தான். ஜில்லா போர்டு ஆட்சியை நடத்துவதற்கு ஊழியர்களாக (அதாவது செக்ரடரி, சத்திரம் சூபிரிண்டெண்டெண்டு, சத்திரம் தாசில்தார் ஆகிய பெரிய அலுவலாளர் முதல் தாளாளர்கள் வரையிலுள்ள எல்லாப் பதவிகளிலும்) இருந்து அலுவல் நடத்தத் தமிழ்ப் பிள்ளைகள் எல்லாருக்கும் திறனுண்டு என்று உலகுக்கு எடுத்துக்காட்டியவர், நம் செல்வம் அவர்கள்தான்.

ஆசிரியர்களாகட்டும், மருத்துவர்களாகட்டும், எஞ்சினீயராகட்டும், வேறுஎந்த அலுவலாளராகட்டும், தத்தம் கடமையிலிருந்து வழுவ முடியுமா? அவர்களுடைய ஆட்சியிலே, பாட்டை வசதிகள் எவ்வளவோ ஏற்பட்டன; பள்ளிக் கூடங்கள் பெருகின; மருத்துவ சாலைகள் மலிந்தன; இன்னும் எத்தனையோ பொதுத் தொண்டுகள் சிறந்தன. நீதியும், நேர்மையும் சிறந்து விளங்கியது, அவர்களது ஆட்சியில்.

சென்னைச் சட்ட சபையில் நம் செல்வம் அவர்களது வாதம் எல்லோரும் மெச்சும் முறையில் இருந்து வந்தது. சட்டங்கள் அமைப்பதிலும், திருத்தப்படுவதிலும் இவர்களது ஆட்சி அனுபவம் பெரிதும் பயன் பட்டது. சென்னை ஆட்சியில் உள்நாட்டு அமைச்சராக இருந்து திறம்பட ஆட்சி செய்தார்கள்.

தமிழரது வாழ்வு தன் வாழ்வு எனவும், தமிழின் ஆக்கம் தன் ஆக்கம் எனவும் கருதி உழைத்தார்கள். கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழர்கள் நடத்திய போராட்டத்தில் தளபதியாக விளங்கியவர்கள் நம் செல்வம் அவர்களாவார்கள்.

அரசியல் சீர்திருத்தம்பற்றி இலண்டனில் கூடிய வட்ட மேசை மாநாட்டில் தமிழர் நலனுக்காக வாதாடினார்கள். ஆங்கில ஆட்சியில் இந்தியா மந்திரிக்குத் துணைவராக நியமிக்கப்பட்டு, இலண்டன் மாநகருக்குப் புறப்பட்டுச் சென்றபோது, 'தமிழர் நலனுக்கு உழைப்பேன்' என்று உறுதி கூறிப் புறப்பட்டார்கள். அவர் ஏறிச் சென்ற வான ஊர்தியோடு அவரைக் கொண்ட ஓமான் கடலைத் தமிழர்கள் மறக்க முடியாது. தனிப் பெருந் தலைவரை இழந்த தமிழர் தாயை இழந்த சேயைப்போல், தவித்தார்கள்.

தமிழர் மனமுடைந்து போகிறவர்களல்ல. அவர்கள் செய்த பணியைத் தொடர்ந்துசெய்வார்களாயினர். இன்று தமிழ் நாட்டிலே நமது செல்வம் இல்லாத இடம் இல்லை. ஒவ்வொரு தமிழ் இளைஞரும் ஒவ்வொரு பன்னீர்ச் செல்வமாக விளங்குகிறார்கள்" என்பதாகப் பேசி முடித்தார்கள். நன்றி கூறலுடன் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

இன்றைய தேவை

கீழ்தேச மக்கள் ஏனையதேச மக்களைப் போல முன்னேற்றமடைய வேண்டும். அப்படியானால் அவர்கள் என்ன செய்யவேண்டும்? எம்முறைகளைக் கையாளவேண்டும்? இது பிரதானமாய்க் கவனிக்கப் படவேண்டிய முக்கிய விஷயம்.

கீழ்நாட்டு மக்கள் முதலில் வாழ்க்கையின் தத்துவம் இன்னதுதான் என்று நன்றாய் நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அது அபிவிருத்திக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். அப்படி வகுக்கப்படும் வாழ்க்கைத் தத்துவத்தைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்வதற்கு வேலைத் திட்டம் ஒன்று அமைத்துக் கொள்ளவேண்டும்.

அதன்பேரில் புதுதினுசு மக்களை உண்டாக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கையின் புதிய தத்துவத்தின் நியதிப்படி நடக்க உறுதி செய்து கொள்ளவேண்டும். அவர்களுக்குப் போதிய ஆற்றல் இருக்கவேண்டும். வேலைத் திட்டத்தின்படி வேலை செய்து முன்னேறிச்செல்லும் சக்தி அவர்களிடம் அமைந்திருக்க வேண்டும்.

உலகத்தில் மக்களின் வாழ்க்கை முறையில் இரண்டு வித்தியாசமான அபிப்பிராயங்கள் உண்டு. ஒன்று, புராதன சாஸ்திரியக் கொள்கை பற்றியது. அதன்படி உலகத்தின் இலௌகிக முன்னேற்றத்திற்கும் ஒழுக்க முறைச் சீர்திருத்தத்திற்கும் ஒரு பிரத்தியேக காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது. இக்கொள்கையுடையவர்களிடம் உலக க்ஷேமத்திற்கான முயற்சியோ, ஆர்வமோ, சிரத்தையோ இருப்பதில்லை. உலகத்தைமேம்படச்செய்வதற்கென்றே கடவுள் ஒருவரை அவதரிக்கும்படி செய்வார் என்று அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். அல்லது கடவுளுடைய தயவால் ஒரு தீர்க்கதரிசி பிறந்து உலகத்

திற்கு விசேஷ நன்மை செய்வார் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள்.

மற்றொரு அபிப்பிராயம் மனிதன் ஆதியில் காட்டுமிராண்டி நிலைமையிலிருந்து படிப்படியாக உயர்ந்து மேன்மையடைந்து வருகிறான் என்பது. அத்தகைய உயர்வு நிலைகள், புரட்சிகள் அதாவது பெரிய மாற்றங்கள் எனப்படுகிறது. வெகுகாலமாக மனிதன் அற்பமான செய்பொருள்களில் திருப்தியடைந்திருந்தான். அப்படிப்பட்ட அற்பமான ஆயுதங்களின் உதவிகொண்டே அவன் நீண்டகாலம் வாழ்க்கை நடத்திவந்தான்.

முதன் முதலாகப் புராதன மனிதன் ஆகாரப் பொருள் உற்பத்தி விஷயத்தில் சிறிது முன்னேற்றமடைந்தான். அதுதான் மக்கள் கண்ட முதல் புரட்சி. இப்புரட்சியின் பலனாக விவசாய முறை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆடு மாடுகள் முதலிய வீட்டுப் பிராணிகளைச் சேர்த்து வளர்க்கும் வழியைக் கண்டார்கள். இதனால மக்கள் வாழ்வில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. வாழ்க்கை நிலை கொள்வதற்கு வசதியேற்பட்டது. குடியிருப்புக்கான அனுகூலங்கள் ஏற்பட்டன. அது காரணமாக கிராமங்கள் தோன்றின. அவைகளில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் இருந்துவர ஆரம்பித்தார்கள். வயல்களும் பண்ணைகளும் ஏற்பட்டன. வேட்டைத் தொழில் அபிவிருத்தியடைந்தது.

இரண்டாவது புரட்சி கி. மு. 4000, 5000 வருடங்களில் உண்டாயிற்று என்று சொல்லலாம். அப்போதுதான் மனிதன் முதல் முதலாக கலப்பையைக் கண்டு பிடித்தான். சக்கரம் போட்ட வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. படகுகள் உபயோகத்திற்கு வந்தன. காற்றின் வேகத்தை உபயோகித்து கொள்ளத் தெரிந்துகொண்டனர். சூற்றின் வேகத்தைத் தணிக்கவும் கற்றுக்கொண்டனர். பூகபௌதீக முறைகளையும் ரசாயன விஷயங்களையும் புதிதாகக் கண்டுபிடித்தார்கள். அம்முறையால் உலோகங்களை அதிகமாக உபயோகிக்கலானார்கள். அதிலிருந்து குடியானவர்களென்றும், தொழிலாளிகளென்றும், வியாபாரிகள்என்றும் வகுப்புகள் ஏற்பட்டன.

பிறகு ஜனசமூகத்தில் ஒழுங்கையும் அமைதியையும் உண்டாக்க ஜனத்தலைவர்கள் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதிலிருந்து ஆட்சிமுறைகள் முளைத்தன. யுத்த முறைகள் வகுக்கப்பட்டன. ஜன சங்கத்தை உறுதிப்படுத்த மனித வாழ்க்கையின் தத்துவங்களைக் கண்டார்கள்.

இப்பொழுது மூன்றாவது புரட்சிக்குறிய காலம். கல்வியின் மூலமாக புது வகுப்பு மக்கள் உண்டாக்கப்படவேண்டும்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

போலீசார், கருப்புச்சட்டைகளையும் கழகக் கொடிகளையும், சந்தாப்புத்தகங்களையும் எடுத்துச்சென்றனர்.

துறையூரில்

3—3—48ல் துறையூரில் தோழர்கள் து. வி. நாராயணன் அவர்கள் வீட்டையும், டி. எம். பாலசுந்தரம் வீட்டையும், கு. கிருஷ்ணசாமி வீட்டையும், டி. ஆர். வீரண்ணன் வீட்டையும் சோதனையிட்டனர்.

திருப்பூரில்

3—3—48ல திருப்பூர்த் திராவிடர் கழகத்தைப் போலீசார் சோதனையிட்டு, அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்று எழுதிக் கொண்டு போய்விட்டனர்.

திண்டிவனத்தில்

4—3—48ல் திண்டிவனத்திலுள்ள திராவிடர் கழகத்தையும், தோழர்கள் அப்பாண்டநாதன், பழனி ஆகியவர்கள் வீடுகளையும் சோதனையிட்டு கழக சம்பந்தமான புத்தகங்களை, எடுத்துச் சென்றனர்.

வாணியப்பாடியில்

போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தனது பரிவாரத்துடன் வாணியம்பாடி 'திராவிடர் கழகம்' கட்டிடத்தில் சோதனை செய்தார். அவ்விடமிருந்து யாதொன்றும் பறிமுதல் செய்யப்படவில்லை. அதன் பிறகு மாலை 5 மணிக்கு தோழர் சி. கோவிந்தராஜன் வீட்டில் சோதனை போடப்பட்டதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

விழுப்புரத்தில்

விழுப்புரம் டாக்டர் தியாகராசன் வீடு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். சப்இன்ஸ்பெக்டர் மூவர், போலீஸ் கான்ஸ்டேபிள் சிலருடன் சோதனை இடப்பட்டது. கழக சம்பந்தமான ரசீதுகள், சில கடிதங்கள், மாநாட்டு சம்பந்தமான குறிப்புகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். 1-15 மணி நேரம் சோதனையிட்டார்கள்.

நடராசன் வீடு சோதனை இடப்பட்டது, ஒன்றும கிடைக்கவில்லை.

ப. நடராசன் வீடும் சோதனையிடப்பட்டது.

இராசிபுரத்தில்

3-3-48 இரவு சுமார் 7 மணிக்கு இராசிபுரம் சர்கிள் இன்ஸ்பெக்டர் "பெரியார் மாளிகை" என்ற வீட்டுக்கு வந்து இயக்க கமிட்டி உறுப்பினர்கள் யார் யார் என்பதை விசாரித்துச் சென்றார்.

சேலம் குகை திராவிடர் கழகம்

சேலம்—குகை திராவிடர் கழகத்தை 3—3—48-ல் சேலம் நகர போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டனர். இயக்க புத்தகங்களும் பத்திரிகைகளும் கட்டும் இருந்தன. ஒன்றும் எடுத்துக்கொண்டு போகப் படவில்லை.

தர்மபுரியில் சோதனை

இன்று காலை 9-30 மணிக்கு தர்மபுரி நகர திராவிடர் கழகத் தலைவர் திரு பி. பொன்னுசாமி வீட்டையும் அச்சகத்தையும் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டார்கள். திராவிடர் கழக மினிட் புத்தகத்தையும் சில கழக மீட்டிங் விளம்பரத் துண்டுகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சிதம்பரத்தில்

4—3—48 காலை 8-க்கு சிதம்பரம் திராவிடர்கழகத்தை சோதனை செய்வதாய் போலீசார் டவுன் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள எம். கே. சுந்தரம் வீட்டையும், பக்கத்தில் 4 மைலில் உள்ள சாலியந்தோப்பு கிராமத்தில் சிதம்பரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கு. கிருஷ்ணசாமி வீட்டையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் போதிய சகாக்களுடன் வந்து சோதனை போட்டு, விசாரித்துச் சென்றார்கள். யாதொரு ஆட்சேபகரமான பொருளும் கிடைக்கவில்லை.

புதியதொடர் கதை   கற்பனைச் சித்திரம்

[29—2—48 தொடர்ச்சி]

விமலாவின் ஜோதிடம் பலிக்கவில்லை. வந்தவள், மரகதமல்ல. வேலைக்காரி, கையில் பலகாரத் தட்டும், காப்பிச் செம்பும் எடுத்துக் கொண்டுவந்து வைத்தாள். "அகிலாண்டமா, எங்கேடி மரகதக்கா?" என்று கேட்டாள் விமலா. அகிலாண்டம் பதிலைத் தன் கண்ணாலேயே தெரிவித்து விட்டாள். "ஏது! இவ்வளவு பொழுதோடே வந்துட்டாரா. சரி இன்று மரகதத்தின் கதையை நீங்கள் கேட்க முடியாது. மரகதத்தின் செட்டியார் வந்துவிட்டாராம். அவர் போகு முன்பு மரகதம் அப்படி இப்படி அசைய மாட்டாள். நாளைக்குப் பார்த்துக் கொள்வோம். நீங்கள் இந்தக் காப்பி பலகாரத்தைச் சாப்பிடுங்கள்" என்று விமலா கூறினாள். டாக்டர் சாப்பிட ஆரம்பித்தார், "மிளகாயை எடுத்துவிடுங்கள். அதோ கருவேப்பிலை, இஞ்சியை எடுக்காமலே தின்னுகிறீரே, என்ன அவசரம்?" என்று விமலா உபசரித்தாள். டாக்டருக்குக் கூட ஆச்சரியமாயிருந்தது விமலாவின் உபசரணை. பழகவேயில்லை. நேற்றுச் சந்தித்து, இன்று இவ்வளவு லலிதமாகப் பேசுகிறாளே. ஒருவேளை தாசிகளின் ஜாலம் என்கிறார்களே, அதுதானோ இது, என்றுகூட எண்ணினார். காப்பி சாப்பிட்டானதும் வெற்றிலைத் தட்டு வந்தது. டாக்டர் "போடும் வழக்கமில்லை" என்று கூறினார். "நான் கூட, கண்டவர்களைக் கூப்பிட்டு வெற்றிலை போடச் சொல்லும் வழக்கமில்லை" என்று கிண்டல் செய்தாள் விமலா. கிண்டல்கணையா, காமன்கணையா என்று தெரியாது சுந்தரேசன் திகைத்தான். அவனது திகைப்பே விமலாவுக்கு திவ்யமான விருந்தாக இருந்தது. "சரி, மரகதம் கதைதான் இன்று கூறுவதற்கில்லை. அதோ எங்க அகிலாண்டத்தின் சேதி தெரியுமோ உமக்கு. அது, என்சேதி, மரகதத்தின சேதி எல்லாவற்றையும் விட வேடிக்கையானது" என்று விமலா கூறினாள். அகிலாண்டம், "எப்போதும் உங்களுக்கு விளையாட்டுத் தானம்மா!" என்றாள். "ஏண்டி, அது கூட வேண்டாமென்கிறாயா!" என்று கூறி அவள் தாடையை இடித்துவிட்டு, "டாக்டர் சார், இந்த அகிலாண்டத்தின் புருஷன் இப்போது எங்கேயோ பல்லாரி சிறையிலே இருக்கிறானாம். இவள் கதையை கேளுங்க" என்று ஆரம்பிக்கப் போகும் சமயம், காலடி சப்தம் கேட்டது; ஒரு ஆசாமி நுழைந்தான். அகிலாண்டம் மெல்லக் கீழே போய்விட்டாள். "பார்த்தீர்களா ஆசாமியை, எதிரிலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்காரன். அகிலாண்டத்துக்கு ஆசை நாயகன் அவன்தான்" என்றாள் விமலா. "புருஷன் இருப்பதாகக் கூறினாயே" என்று சுந்தரேசன் கேட்டான். "இருக்கிறான் ஜெயிலில்; இங்கே இவன் இருக்கிறான்" என்று விமலா குறும்பாகக் கூறிவிட்டு, 'இதுதான் டாக்டர் எங்கள் உலகம்'

எங்கள் உலகமே அலாதியானது. அதைப்பற்றிய கவலை மற்ற உலகத்துக்குக் கிடையாது. கோழி மனிதனுக்குப் பண்டம் பலகாரமாகிறது. ஆனால் அது பிழைத்து வளருவது குப்பைமேட்டைக் கிளறி, புழு பூச்சி தின்றுதான்." என்றாள் விமலா,

"விமலா, இப்போது கோழிப் பண்ணை வைத்து, கோழிகளை வளர்ப்பது ஒரு படிப்பாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறது, உனக்குத் தெரியாது" என்று டாக்டர், நவயுக உலகச் சேதியைக் கூறினார்.

"ஆமாம்! கோழி வளர்ப்பார்கள். குரங்கை வளர்ப்பார்கள், இன்னமும் ஏதேதோ செய்வார்கள். ஆனால் உலகத்தில் பிறந்தவர்களை எப்படி வளர்ப்பது என்ற கவலை கிடையாது. மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கிறான் என்று கூறிவிடுவார்கள்" என்றாள் விமலா.

"விமலா, உனக்கு வறுமையின் காரணமாக வேதாந்தம் நிரம்பவந்து விட்டது." என்றான் சுந்தரேசன்.

"ஆமாம்! இரண்டும் நான் கேட்காமலேயே என்னிடம் வந்து விட்டன." என்று கூறிவிட்டு, "நீங்களுந்தான், நான் வேண்டாமென்று கூறியுங்கூட, தானாக வந்தீர்கள்" என்று கூறிச் சிரித்தாள்.

"அப்போது நான், வறுமை போலத்தான் உனக்கு வாட்டம் கொடுக்கிறேனா?" என்று டாக்டர் கேட்க, "அது எப்படி இப்போது தெரியும். போகப் போகத் தெரியும் புடவையின் சாயம் என்பார்கள். அது கிடக்கட்டும் டாக்டர், எனக்கு........

நேரமாகிவிட்டது, நான், ஜடை சீவி, முகம் கழுவி, பொட்டிட்டு, அலங்காரம் செய்துகொள்ள வேண்டும். அவர் வரும்போதே சிவந்த கண்களோடு வருவார், சிங்காரித்துக் கொண்டிரா விட்டால், "ஏண்டி மூதேவிபோலே இருக்கிறே" என்று ஆரம்பித்தால், பிறகு, அர்ச்சனை பலமாக நடக்கும். ஆகையால் நாளைக்கு இந்த நேரத்துக்கும் சற்று முன்னதாகவே வந்து விடுங்கள், அகிலாண்டத்தின் கதை, மரகதத்தின் சேதி, என் விஷயம் எல்லாம் பேசலாம். நேரே வீடு போய்ச் சேருங்கள், தெரிகிறதா, நான் கூப்பிட்டது போல, வேறு எவளாவது கூப்பிட்டால், போய்ச்சிக்கிக்கொள்ள வேண்டாம், ஜாக்ரதை" என்று டாக்டருக்கு எச்சரிக்கைசெய்தாள் விமலா.

"அது என்ன விமலா, நான் கூப்பிட்டவள் பின்னாலெல்லாம் போகிறவன் என்று எண்ணிவிட்டாயா!" என்று சுந்தரேசன் கேட்டான்.

"வண்டு கூட அப்படித்தான் சொல்லும், நான்பார்க்கிற பூமீது எல்லாம் உட்காருகிறேனா என்று. டாக்டரே நீர்குழந்தைதான். இருந்தாலும் குழந்தைகள் தானே பிறகு பெரிய ஆளாகி விடுகின்றனர். என்னைக்கூட குழந்தையாக இருக்கும் போது

அம்மா கேட்டார்கள் "நீ கலியாணம் பண்ணிக்க மாட்டாயா" என்று. நான் பயந்து கொண்டு சொல்வேன், 'ஐயயோ நான் மாட்டவே மாட்டேம்மா. எனக்குப் பயமா இருக்கும்' என்று. அது ஒரு காலம், இது ஒரு காலம்."

"எல்லோரையும் போலத்தான் என்னையும் எண்ணிக்கொண்டாய்" என்று டாக்டர் கூறிக்கொண்டே எழுந்திருக்கப்போகும் சமயம்,

"எல்லோரையம் போலவே
என்னை எண்ணலாகு மோடி,
போடி" என்று விமலா கீதத்தைத் துவக்கினாள்.

இனிய குரல்! அந்தப்பாட்டின் பொருள் நயத்தை, விமலாவின் குரல் அதிகப்படுத்திற்று. இரண்டொரு அடிகள் பாடிவிட்டு நிறுத்திக்கொண்டாள். பாட்டு முழுதும் பாடும்படி சுந்தரேசன் கேட்டார். தனக்குப்பாட்டுத் தெரியாதென்றும், கிராமபோன் பிளேட் கேட்டுக் கேட்டு இரண்டொரு பாட்டுக்கற்றுக் கொண்டதாகவும் கூறித் தப்பித்துக் கொண்டாள். ஆனால் டாக்டருக்கு, விமலா, பாட்டை எடுத்த எடுப்பும், குரலின் பண்பும், அவள் நல்ல பாடகி தான் என்பதைக் காட்டிற்று. பிறகொரு சமயம் பாடச்சொல்லிக் கேட்கவேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டு, "நாளை வருகிறேன்" என்று கூறி, விடைபெற்றுக் கொண்டு டாக்டர் தன் வீடு போய்ச் சேர்ந்தார்.

* * *

"இந்த மாதிரி பெரிய இடத்துச் சிநேகிதம் கிடைப்பது ரொம்பக் கஷ்டமடி அம்மா. இந்தக்காலத்தில் தானாகவருகிற சீதேவியைக் காலால் உதைத்துத்தள்ளாதே. ரங்கனுக்கு பக்குவமாகக் கூறி விடு, எப்போதோ, சமயாசந்தர்ப்பத்திலே வந்து போ, பழைய சிநேகிதத்தை நான் மறந்து விடுவேனென்று சொல்லேன். ரங்கன் எதிரிக்குதித்துவிடுவானா? அவன் ஏதாவது மிரட்டினால் நான்செட்டியாரிடம் சொல்லிச் சரிப்படுத்தி விடுகிறேன்."

"அக்கா, நீங்கள் என்ன சொன்னாலுஞ்சரி, நான் அந்த டாக்டரை மட்டும் கெடுக்கமாட்டேன்."

"இதிலே கெடுப்பது என்னடி இருக்கிறது. ஊரிலே உலகத்திலே நடக்காத விஷயம் போலே பேசுகிறாயே."

"ஊரிலே உலகத்திலே இருக்கிற எல்லோரையும் போன்றவரல்ல, டாக்டர்."

"ஆமாம் அதுக்குத்தான்சொல்லுகிறேன், நல்ல இடம், தங்கமான மனுஷர், உன்னிடம் ரொம்ப லயித்துப்போயிருக்கிறார்" என்று.

"நானும் தான அவரிடம் லயித்துவிட்டேன்."

"ரொம்ப நல்லதாச்சி. பழம் நழுவிப் பாலிலே விழுந்துவிட்டது. இன்னும் ஏன் யோசனை?"

"அக்கா, உனக்கு நான் சொல்வது புரியக்கூடப் புரியாது. எனக்கு டாக்டர் மீது அளவு கடந்த ஆசை இருக்கிறதால்தான், நீ சொல்கிறபடி, அவரைக் கெட்ட நடத்தைக்கு இழுக்க எனக்கு இஷ்டமில்லை."

"இது என்னடி அம்மா வேதாந்தம்; எனக்குப் புரியவில்லை, ஏதோ "ராமா கிருஷ்ணா கோவிந்தா" என்று காலந்தள்ள, எவனோ ஒருவனைப் பிடித்துக்கொண்டு, நாலு பேர் கண் முன்னாலே நாகரிகமாக வாழவேண்டியது தானே. அதை விட்டுவிட்டு, எனக்கு அவர் மீது ஆசையா சொல்ல முடியாதபடி இருக்கிறது. ஆனால் அவரை நான கெடுக்கமாட்டேன் என்று கூறுகிறாயே கெடுப்பது என்ன இருக்கிறது இதிலே."

"அக்கா, நான் ஒன்று கேட்கிறேன், யோசித்துப் பதில் சொல்லு. கண்ணுக்கு அழகாக ரோஜா இருக்கிறது. அதன் மீது நமக்கு பிரியம் இருக்கிறது. அதற்காக வேண்டி, அதனை எடுத்து வைத்துக்கொண்டு அழகுபார்க்கலாம், அதன்வாசனையை அனுபவிக்கலாம். ஆனால் ஆசை காரணமாக அதைக் கசக்கிப் பிழிந்து விட்டால், எந்த ரோஜா மீது நமக்கு ஆசை பிறந்ததோ, அது ரோஜாவாக இராதே. கூழாகித்தானே போய் விடும்."

"நல்லகதை சொன்னாயடி விமலா! ரொம்ப நல்ல கதை. அப்ப ரோஜாவை எடுத்து இனிமேலே யாரும் ஜடைக்கு வைத்துக்கொள்ள மாட்டார்கள் போலே இருக்கிறது. நீ இந்த ஊருக்கு ராணியாக இருந்தால், அப்படி ஒரு ஆர்டர் போட்டுவிடுவாய். உம்! வேதாந்த புத்தகத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறாயே, அதனுடைய பலன் இது. புஷ்பம் இருப்பது ஜடை அலங்காரத்துக்கு. பொழுதுபோனதும் வைக்கிறோம்; காலையிலே கசங்கியதை வீசி எறிகிறோம். இது சகஜம்."

"அப்படிச்சொல்லு. இப்போ நீ என் வழிக்கு வந்தாச்சி. ரோஜாவை மாலையிலேயே ஆசையாக ஜடையிலே வைத்துப்படுக்கையிலே புரண்டு அதனைப் பாழாக்கி, பிறகு குப்பை மேட்டுக்குப் போட்டு விடுவது; அதைப் போலத்தானே நடக்கும் டாக்டருக்கும். ஆசையாலே அவரை இங்கே, அழைத்துக் கூத்திக் கள்ளனாக்கி, கண்டவர் கேட்கவும், பார்க்கிறவர்கள் தூற்றவுமாக்கி, அவருக்கு இருக்கிற பேரைக் கெடுக்க வேண்டும். இதுதானே நடக்கும் உன் யோசனைப்படி நடந்தால். என் யோசனை அப்படியில்லை. தோட்டத்திலே பஞ்சவர்ணக்கிளியைப்பார்த்து மகிழ்வதைப்போல், புஷ்பத்தின் மணம் காற்றோடு கலந்து வருவதை அனுபவித்து ஆனந்திப்பதைப்போல, அவர் மாசு மருவில்லாது நல்லவரெனப் பெயரெடுத்து, இருப்பதைக் கண்ணாலே கண்டு, கருத்திலேகளிப்புக்கொள்ள வேண்டும். அது தான் என் ஆசை. உனக்கு அது ஆச்சரியமாக இருக்கும். எனக்குமே இதற்கு முன்பு எப்போதும் இப்படி எண்ணம் இருந்ததில்லை இப்போது தான் அவர்மீது ஆசைகொள்ளுகிறேன். அது பூரணமான ஆசை. ஆகவே நான் அவரைப்பூஜிக்கிறேன்"

"சுத்த பைத்தியமடி நீ. உனக்கு" என்று மரகதம் கடைசியாகக் கூறிவிட்டாள்.

சம்பாஷணை, மரகதத்துக்கும் விமலாவுக்கும் டாக்டர் வந்துபோன மறுதினமே காலையில் நடந்தது. சுந்தரேசனை நாயகனாக அடையும்படி மரகதம் விமலாவுக்கு யோசனை கூறினாள். வலையை வீசு என்றாள். விமலா மறுத்தாள். அதற்காக அவள் கூறிய காரணம், மரகதம் அதுவரை எங்கும் கேட்டு அறியாதது. டாக்டரும் விமலாவும் பேசுவதைக்கேட்டு, "சரசமாடுகிறார்கள்" "சரியானகிராக்கியை விமலா பிடித்துவிட்டாள்." "அவளைப் பிடித்த பீடை போய்விட்டது" என்று மரகதம் எண்ணினாள். ஆனால் விமலாவின் வியாக்யானம், விசித்திரமாக இருந்தது. ஏன் இவள் இப்படிப் பேசுகிறாள் என்று மரகதம் எண்ணினாள்.

"மகா கைகாரி இவள்; நமக்குக் கூடச் சொல்லாமல், தெரியாமல், டாக்டரைச் சரிப்படுத்தப் பார்க்கி

றாள்; எந்த உத்தம பத்தினியும் பேசாதபேச்செல்லாம் பேசுகிறாளே; இவ்வளவும் ஜாலம்; டாக்டர் எப்படியும் தன் வலையில் விழுவான். பிகுவாக இருந்தால், "ரேட்" உயரும் என்று சிறுக்கி, தளுக்குச் செய்கிறாள். தளுக்கை என்னிடமே காட்டுகிறாளே. ஆமாம்! என்ன இருந்தாலும் அவள் தாசியல்லவா! அந்தத் தளுக்கு கூடப் பிறந்ததாயிற்றே. அதை ஆண்களிடமும் காட்டுகிறாள், பெண்களிடமும் காட்டுகிறாள், நானும் பல பேரைப் பார்த்தேன், இவளைப் போலக் கண்டதில்லை" என்று மரகதம் தனக்குள் கூறிக் கொண்டாள். மரகதத்துக்குக் கோபமும் துவேஷமும் வந்துவிட்டது. அத்துடன் பொறாமையும் வந்துவிட்டது. "இவ்வளவு பேசுகிற இவளை, ஒரு கை பார்த்தே விடுகிறேன். இவள் பிளான் எனக்குத் தெரிந்துவிட்டது. அந்த டாக்டர் தன்னைத் தவிர வேறு பெண்ணைத் தேடமாட்டான் என்று நினைக்கிறாள். நான் காட்டுகிறேன் என் சமர்த்தை. டாக்டரை, நான் என் வலையில் போடுகிறேன்" எனச்சபதம் செய்துகொண்டாள்.

அன்றுமாலை, சொன்ன வண்ணம் சுந்தரேசன் வந்து சேர்ந்தான.

(தொடரும்)

கற்பனைச் சித்திரம்

அவன் பெற்ற பரிசு

[சா. கணேசன்]

மழை சற்று நின்றது. இருள் சிறிது நீங்கிற்று. இடியும் மின்னலும் மாறி மாறி இடித்தவண்ணமாயும், மின்னிய வண்ணமாயும் இருந்தன. அவ்வமயம் குடிசையின் வாயிற்படியில் தபால்காரன் வந்து, "பொன்னம்மா, பொன்னம்மா" என்று கூப்பிட்டான். தாயும் மகனும் வந்தார்கள். சண்டையில் சிப்பாயாக இருக்கும் மகன் குருசாமி அனுப்பிய ரூபாய் இருபதும், ஒரு கவரும் கொடுத்துவிட்டுச்சென்றான். சோமு கவரைப் பிரித்து வாசித்தான். குருசாமி டிஸ்சார்ஜ் ஆகிவருவதைக் கடிதத்தின்மூலம் அறிந்து சந்தோஷம் அடைந்தார்கள்.

மறுநாள் சோமு தன் அண்ணனை வரவேற்கப் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றான். புகைவண்டியும் வேகமாக வந்து நின்றது. சிப்பாய் குருசாமியும், 'ஒதுக்கப்பட்டவன்' என்று எண்ணப்படும் 'முத்தன்' என்னும் நண்பனும் வந்து இறங்கினார்கள். சோமு தன் அண்ணனிடம் உள்ள பெட்டியை வாங்கிக் கொண்டான்.

முத்தன் தன் நண்பன் குருசாமியிடம் நாளைக்கு வந்து பார்ப்பதாக விடைபெற்றுச் சென்றான். ஊர்ச் சங்கதிகளைப் பேசிக்கொண்டு சோமுவும் குருசாமியும் வீடு நோக்கி நடந்தார்கள், தாயார் மகனை அன்போடு அணைத்துக் கொண்டாள். நெடுநாள் பார்க்காதிருந்த காரணத்தால் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்கள்.

குருசாமியின் நண்பனான முத்தன் கல்வி கற்றவன். அவன் தங்கை தங்கமும் கல்வி கற்றவள்; அழகு வாய்ந்தவள். சேரியில் இவர்கள் குடும்பம் தான் கொஞ்சம் பணமும், செல்வாக்கும், நாகரிகமும் பொருந்தியது. குருசாமி கல்வி கற்றவன்; சீர்திருத்தத்தில் ஆழ்ந்த பற்றுதல் உடையவன். புரட்சியில் எழுந்த புதுமை குருசாமி. குருசாமி சண்டைக்குப் போகுமுன்னரே தங்கத்தை நன்கு அறிவான். தங்கமும் குருசாமியை நன்கறிவாள். அவனுக்கு அவள்மீது அன்பு. அவளும் அவன்மீது அன்புகாட்டினாள்.

ஒருநாள் தங்கம் காவேரியிலிருந்து தண்ணீர் எடுத்து வருகையில் குருசாமி பார்த்தான். தங்கம் இடுப்பில குடம் வைத்தபடியே அவனைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே சென்றாள். அன்றுமுதல் அவர்கள் மனதில் ஓர் உணர்ச்சி—காதல் தோன்றி வளர ஆரம்பித்தது. மற்றொரு நாள் காவேரி யாற்றங் கரையில தங்கமும், முத்தனும் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த போது, குருசாமியும் அங்குவந்தான். வெகுநேரம் மூவரும் உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தார்கள். நேரம்ஆகிவிட்டது. பொழுதும் சாய்ந்தது.

குருசாமி:— முத்தா, உன் தங்கையின் மணசம்பந்தமாக என்ன செய்யப் போகின்றாய்?

முத்தன்:— நான் என்ன செய்வது? அவளும் படித்தவள்தானே. தேர்ந்தெடுக்கட்டும் தன் கணவனை ....என்னம்மா, யாரையாவது நீ விரும்புகிறாயா?

தங்கம் கடைக்கண்ணால் நோக்கியவாறே மவுனமாய்இருந்தாள். பிறகு, குருசாமி, "அவள் என்னைத்தான் காதலிக்கிறாள். அதனால்தான் சொல்வதற்கு வெட்கம். நானும் அவளையே திருமணம் செய்துகொள்ளப் போகின்றேன்." என்றான். முத்தன் ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றான். இந்தமுறையில் அவர்கள் பிரிந்தார்கள்.

* * *

ஊரார் குருசாமியையும், அவன் தாயையும் ஒருசேரப் பழிக்க ஆரம்பித்தனர். பக்கத்து வீட்டில் உள்ள ஒருத்தி, தன் புருஷனிடம், "நம்ம அண்டை வீட்டுப் பொன்னம்மா இருக்காளே—அந்த அறுத்துட்ட முண்டை—அவ பிள்ளை குருசாமி—சேரி பறைப்பொண்ணு முத்தன் தங்கச்சி தங்கத்தை..........." என்று சாடை மாடையாகக் கூறத் தொடங்கினாள். "வச்சிருக்கானா?;" இது அவள் புருஷன் கேள்வி. "ஆமாம்" என்று தலையை ஆட்டி, வாயைக் கையால் பொத்தி, உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டே வேடிக்கை காட்டினாள். ஒருநாள் வழக்கம்போல குருசாமியும், தங்கமும் பேசிக் கொண்டிருந்தபோது எதிர் வீட்டுக்காரன் தன் நண்பனுடன் இந்த 'வேடிக்கையைக்' காட்டிச் சிரித்துக்கொண்டே நின்றான். குருசாமியின் தாயாருக்கு இதெல்லாம் காதில் விழுந்தது. அனலில் இட்ட மெழுகைப்போல் அவள் மனம் உருகியது. இருதலைக் கொள்ளி எறும்பு போல் அவள் மனம் புழுங்கினாள். மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் இந்த முறையில் அவள் மானத்தை ஊரார் வாங்கத் தலைப்பட்டார்கள். தம் மகனைக் கூப்பிட்டாள் தாயார். எவ்வளவோ நல்ல முறையில் புத்தி சொல்லியும் பலன் இல்லாமல் போய்விட்டது. கடைசியில தாயார், "குருசாமி, என் மானம்போவுதே. நீ அந்தப் பொண்ணோடே இப்படிச் சுத்தித் திரியலாமா? நம்ம சாதிக்கே இழிவு வருதே. உலைவாயை மூடினாலும் மூடலாம்; ஊர் வாயை மூட முடியுமா?," என்றாள்.

குருசாமி:— "வேணாம்மா உனக்

கிரகக் கவலை. பறைப்பொண்ணு, பறைப்பொண்ணு எங்கிறியே. பறையன் என்று சொல்றியே. அவ நம்மை விடத் தாழ்ந்தியா?

தாயார்:- என்ன சொல்றே? ஏதேது மனக்கே உடம்பேசல் பண்றியே ஆரம்பிச்சுட்டே! விரலுக்கு விரலு வித்தியாசமிருக்கிறது தெரியாதா? மாடு துண்ற பறையனோடே மனுஷன் தீண்டி வாழலாமா?

குருசாமி:— ஆடு துண்ற அறிவாளியோடே மட்டும் புழங்கறது ரொம்பப் பொருத்தமோ?

தாயார்:- சாதியில்லாத சாதிப் பழக்கத்தை நீ என்னுடா கண்டுட்டே? சொல்லச் சொல்ல மேலே பேசறியே. பழையனூரிலே இருக்காரே அந்த ஜமீன்தாரு. அவர் பொண்ணு பருவக்கன்னு என்ன அழகு தெரியுமா? கண்ணும், மூக்கும் பார்க்க லட்சணமாயிருப்பா. நல்ல மாநிறம். திரண்ட ஐசுவரியம் இருக்கு. நீயும் தங்கக் கொழுந்த பிள்ளை. வேறென்ன வேணும் நமக்கு? நீ கண்ணாலம் பண்ணிக்கிட்டுக்குடித்தனம் வந்துட்டப்புறம் நானு சிவனேண்ணு உக்காந்துக்குவேன்.

குருசாமி சிரித்தான். "பார்ப்போம் அம்மா, அப்புறம் யோசித்துச் சொல்லுகிறேன்" என்றான். தாய் மனம் அல்லவா? உச்சி குளிர்ந்துவிட்டது தாய்க்கு. பெரிய வெற்றி அடைந்தவள் போலத் தாயார், "அத்தையாவது சொன்னியே, என் ராசா!" என்று அளவு கடந்து பாராட்டினாள். குருசாமியும் சிரித்துக்கொண்டே நழுவி விட்டான். அவன் தம்பி சோமுபட்டும் ஏதோ பேச்சில் அதிசயம் கண்டவன் போலச் சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

இது இப்படி இருக்கக், குருசாமியும், புத்தனும், "சாதிப் பேயை ஒழித்திடுவோம், சம நிலையை எங்கும் நாட்டிடுவோம். கலப்பு மணம், விதவை மணம் தேவை," என்ற சீர்திருத்தச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்கள்.

ஒருநாள் 'மண்டூர்' என்னும் கிராமத்தில் கூட்டம் கூடியது. குருசாமி தலைமை வகித்துப் பேசினான்:—

'தோழர்களே, கூட்டத்திற்குத் தலைமை வகிக்க என்னை அழைத்ததற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. இனியும் நாம் சும்மாயிருந்தால் உலகம் சிரிக்காதா? உலகத்திலே உள்ள நாடுகளில் இவ்வாறு ஒற்றுமையைப் பிளக்கும் சாதிப் பிளவுகள் இல்லை. பகுத்தறிவுள்ள மனிதர்களுக்கிடையே உயர்வு தாழ்வு சரியானதா? மிருகங்களிடம் கூட இது இல்லையே. இதுகூடப் பகுத்தறிவின் கோளாறோ? பெண்களை இளம்பிராயத்திலே கலியாணம் செய்துவைப்பதும், தப்பித் தவறிக் கணவன் திடீரென்று இறந்துவிட்டால்—அதுவும் இளம் பருவத்தில், அவளைக் கன்னியாகவே வாழும்படி செய்வதும், ஆடவர்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் கலியாணம் செய்துகொள்ள முயற்சி செய்வதும், எந்த நியாயத்தில் அடங்கியது? எந்த நியாயத்தின் வாயிலாகப் "பறையன்" என்று ஒருவனை இழித்துக்கூறி, அவன் மாட்டைத் தின்னுகின்றான் என்று சொல்லி அறிவைப் புகட்டாமல் ஒதுக்கித் தள்ளுகிறோம்? இது தமிழ்நாட்டுப் பழைய கால அறிஞர் கூறுவதுபோலப் "பேய்களின் வேலை" ஆகத்தானே இருக்க வேண்டும்!" என்று கூறி முடித்தான்.

கூட்டத்தில் இருந்த ஒருவன் மேடையின்மேல் ஏறி, "என்னடா, பேய், கீய் என்கிறாய்" என்று கண்டித்துக் கூறிக்கொண்டு, கலகத்தை உண்டாக்கினான். இதற்குள் கூட்டத்தில் பரபரப்பு உண்டாகி விட்டது, போலீசும் நெருங்கி வந்துவிட்டது. கலகம்செய்தவன், முத்தன்மீது குற்றம் சுமத்திவிட்டுத் தப்பித்துக்கொண்டான். போலீஸ்காரர்கள் முத்தனை விலங்கிட்டு அழைத்துச் சென்றார்கள். அன்புநெறி புகட்டிய முத்தனுக்குக் கிடைத்த பரிசு இது!

திருமண அழைப்பு

14—3—48 ஞாயிற்றுக்கிழமை P. K. அர்த்தனாரிக்கும் ராஜத்திற்கும் சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கர் பள்ளிக்கூடத்தில் 'திராவிட நாடு' ஆசிரியர் C. N. அண்ணாதுரை தலைமையில் திருமணம் நடைபெறும்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கதிர்காமம்

நெல்லிக்காய் மூட்டைகளாகி விடுவர். கதிர்காமத்தில் இந்த ஒற்றுமை மனப்பான்மை காட்டப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், அந்த இடம், யானை, புலி, கரடிகள் நிரம்பிய ஒரு பெரும் காட்டின் நடுவில் அமைந்திருப்பதும், அந்த இடத்தில் கதிர்காமத் திருவிழாவுக்குச் செல்பவர்களைத் தவிர, வேறு யாருமில்லாமல் இருப்பதுமேயாகும். ஒரு காட்டின் நடுவில் கூடியுள்ள ஒரு மக்கட்கூட்டம், ஒற்றுமையாக இருப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்ற இந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்தே அந்த இடத்தில் இந்தப் போலி ஒற்றுமை காட்டப்படுகின்றது. இதுபோலவேதான் கதிர்காமத்தில் நடைபெறுவதாகச் சொல்லப்படும் ஒவ்வொரு புதுமை நிகழ்ச்சிகளும் போலியே அன்றி, ஒரு சிறிதும் உண்மையல்லவென்று உணர்க.

இனி, ஒரு காலத்தில் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டதும், இப்போது நடைமுறையில் இல்லாததுமான கதிர்காமப் புதுமைகள் பலவற்றைப் பற்றிய விளக்கங்களும், பிறவும் இன்னொரு கட்டுரையில் எழுதப்படும்.

✻

செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்டு

O. P. 64 of 47

காஞ்சிபுரத்திலிருந்து காலஞ்சென்ற S. ராஜமாணிக்க முதலியார் குமாரன் மைனர் S. R. மணிக்கும் ஷை யாரின் சொத்துக்களுக்கும் கார்டியன் நியமிக்க

S. S. வடிவேலு முதலியார்

மனுதார்

நோட்டீஸ்

மனுதார் ஷை மைனருக்கும் அவருடைய சொத்துகளுக்கும் கார்டியனாகத் தன்னை நியமிக்க மனுகொடுத்து ஷை மனு வாயிதா 8—3—48-ல் போட்டிருக்கிறது. ஷை கேஸில் சம்பந்தப்பட்டவர்கள் ஆக்ஷேபனை யிருப்பின் வாயிதா தினம் கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளலாம்.

(Sd) ஜி. கிருஷ்ணமாச்சாரியார்,
மனுதார் வக்கீல்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street Conjeeveram